பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

www.tamilnenjam.com

ஏப்ரல் 2019



## விடா முயற்சிக்கு கிடைத்த பரிசு

மனந்திறக்கிறார்

இசைக் கலைஞர் வித்யா சுப்ரமணியன்

நன்மக்கள் உள்ளமெலாம் நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறிபால் எல்லோரும் ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

பல்சுவை
# தமிழ்நெஞ்சம் ®

தோற்றம் 1972 ஏப்ரல் 2019

*ஆசிரியர் / வெளியிடுபவர் :*
**அமின் மொஹமெட்**
*இணையாசிரியர் :*
**முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி**
*நிர்வாக ஆசிரியர் :*
**சஃபி மொஹமெட்**
*ஆசிரியர் குழு :*
**ஹிப்ஸ்ரீ ரஹ்மான்**
**நெல்லை உலகம்மாள்**
**கவிஞர் தென்றல் கவி – தமிழ்ச்சிட்டு**
**கவிஞர் அ.முத்துசாமி**
**கவிஞர் ஈழபாரதி**
**கவிஞர் பாலமுனை பாறூக்**
*ஆலோசகர்கள் :*
**பாட்டரசர் கி. பாரதிதாசன்**
**கவிதாயினி சக்தி ஜோதி**


எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் விமர்சனம், அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப அஞ்சல் தொடர்புகளுக்கு ...

TAMILNENJAM
59, rue des Entrechats, 95800 Cergy - France.

web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன. நூல் விமர்சனம் செய்திட, நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு படைப்பாளிகளே பொறுப்பு. செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.







இம்மூன்றுநூல்களையும் http://tamilnenjam.com/?page_id=4546 இணையதளத்திலிருந்து தரவிறக்கம் (download) செய்துப் படிக்கலாம். முதலிரண்டு நூல்கள் தேவையென்றால் கேளுங்கள் அனுப்பி வைப்போம்.

e-mail : editor@tamilnenjam.com / Cell :+91 9791369818

# இன்னும் உறங்கிடும் ஞாபகமோ!



செந்தமிழ் போற்றிடும் சேவக னே - உன்னைச்
சேர்ந்த வர்க்கேது துன்பமிங் கே
அந்தியில் பூத்திடும் தாமரை யோ - இவள்
அன்பைப் பொழிந்திடும் தேவதை யோ!

கட்டிக் கரும்பென வந்தவ னே - சிறு
கைவிர லாலெனை வென்றவ னே
கொட்டிக் கொடுத்திடு கோமக னே - இன்பம்
கோடிச்சு கம்தரும் மோகன மே!

என்னை ஈர்த்தவன் நெஞ்சினி லே - பொங்கும்
இன்தமிழ்க் கற்பனைக் காவிய மே
தன்னில் சரிபாதி என்றவ னே - உள்ளம்
தஞ்சமென் றுன்னடி தேடுதிங் கே!

தென்னை மரக்கிளைக் கீற்றினி லே -நாளும்
தெம்மாங்கு பாடும் பூங்குயி லே
இன்னும் உறங்கிடும் ஞாபக மோ - அதில்
இன்றுமே நான்வரும் ஓர்கன வோ!

மல்லிகை முல்லையும் பூத்திடிச் சே - அந்த
மஞ்சள் நிலவதைப் பார்த்திடிச் சே
அல்லியும் தன்னிதழ் மூடிடிச் சே - இன்னும்
அந்தப்புறத் திலுன்னைக் காணலி யே!

கள்ளூறும் பார்வையைக் கண்டிட வே - உள்ளம்
காத்திருக் குமென்றன் காதல னே
துள்ளி யெழுந்துவா இக்கண மே - மெல்லத்
தூண்டிடும் ஞாபகம் வாட்டிடு தே!

அன்பெனும் இன்பச் சோலையி லே - இரு
அன்றிலும் கூடிடும் வேளையி லே
தன்னிலை மறக்க வைத்திடு தே -அந்தத்
தென்றலும் உன்பெயர் சொல்லிடு தே!

சத்திய வாக்குத் தந்தவ னே - இன்னும்
சங்கடம் மெத்திடச் செய்வா யோ
முத்தமிழ் வித்தகா கூந்தலி லே - வைத்த
முல்லைப்பூ வாடுமுன் வாரா யோ!

அம்பாளடியாள்

# ஒரு பரபரப்பு செய்தி

**– இசைவாசி**

செய்திக்காகப் பரபரப்பு அடைந்த காலம் சென்றுவிட்டது. செய்தியால் பரபரப்பு அடைகிற காலம் வந்துவிட்டது. ஒரு தகவல் புதுமையானதாகவும், தேவையானதாகவும், இருக்கும் போதுதான் அது மக்களிடையே விழிப்புணர்வு கொடுப்பதாக மாறுகிறது. மக்களை மாற்றுகிறது. ஒரு செய்தி தரும் தாக்கத்தை பொருத்து ஏராளமானவர்கள் அஜாக்கிரதை நிலையில் இருநது தங்களைப் ஜாக்கிரதை நிலைக்குப் பழக்கப்படுத்தி கொள்கிறார்கள். செய்தி பொது அறிவுக் காரர்கள். காரணம் செய்தி தரும் தாக்கம் அப்படி. மேல் படிப்பைத் தொடர முடியாத வர்கள் அதிகம் வாசிக்கும் தாள் செய்தித் தாள். அவர்களுக்கு முனைவர்பட்ட ஆய்வு மாணவனுக்கு இருக்கிற மதிநுட்பம் உண்டு. அவர்கள் வாசித்தது வெறும் தாளல்ல இந்தச் சமூகம்.

சமூகத்தின் புள்ளி விவரங்கள் செய்திகள். 'அரசியல் சண்டை, கந்துவட்டியால் விவாதம், கள்ளக் காதலால் உண்டான அதிர்ச்சி சம்பவம், விவாகரத்து, குடும்ப தகராறு, கூலிப்படை ஏவல், விமான விபத்து, நடைபாதை உடைப்பு, பாலியல் வன்கொடுமை, இராணுவச் சண்டை, காதலிக்காக மோதல், ஆசிட் வீச்சு' இவ்வாறு சுட்டிக் காட்டப்பட்ட அனைத்தையும் நாம் செய்தியாகப் பார்க்கிறோம். இவையாவும் சமூக நடப்பியலின் வெளிப்பாடு. தினமும் நடக்கின்ற சம்பவங்கள் ஒரே குற்றப் பின்னணி கொண்டவை. ஆனால் நடப்பது வித்தியாசமான முறையில் என்பது அவலத்தின் உச்சம்.

நாகரிக காலச்சாரத்தில் உயரிய நமது தமிழினஇளையதலைமுறைஅதேபண்பாட்டு பெருமையை கடை பிடிக்கிறார்களா? மேலை நாட்டு மோகம் அவர்களை கெடுத்து விட்டதா? அவர்களின் மூத்தோர்கள் சரியாக பக்குவப்படுத்தாமல் வளர்த்து விட்டார்களா? களவு வாழ்விலும், கற்பு வாழ்விலும் அறத்தை மதித்த தமிழர்களின் டி.என்.ஏ வா! முறை தவறி ஒழுக்கம் கெட்டு மனக்கட்டுப்பாடின்றி பண்பாட்டு கடிவாளம் இல்லாமல் வாழ்கிறது என்கிற அதிர்ச்சி தமிழகத்திலே நிலவுகிறது. வேர் வளமையாகயும், உயிர்ப்போடும் உறுதியோடும் இருந்து என்ன பயன்? இலைகளும் கிளைகளும் வறண்டு போய் காட்சியளிக்கிறன. பார்க்கிறவர்களின் கண்களில் வேரா தெரியும்? தமிழினம் என்கிற வேரின் பெருமை இலைகளிலும், கிளைகளிலும் அல்லவா இருக்கிறது.

"சுட்டி ஒருவர்பெயர்கொளல் பெறார்" என்னும்தொல்காப்பியபொருளதிகாரகூற்று அக இலக்கியத்திற்கு "தலைவன் தலைவி பெயரைச் சுட்டி காண்பித்தல் ஆகாது" என்று இலக்கணம் வகுக்கிறது. செய்தித்தாள்களில் பெயர்மாற்றப்பட்டுள்ளது என அடைப்புக் குறியில் குறிப்பிடுவார்கள். பெண்ணின் பெயரை உலகிற்கு தெரியப்படுத்துவது தவறு என்கிற கலாச்சாரம் செய்திகளில் இடம்பெறுவது பாதிக்கப்பட்ட பெண்ணிற்கு எதிர்கால நலனை கருத்தில் கொண்டுதான்.

செய்தி பரிமாற்றம் சமூக களத்தின் களைகளை வேரோடு பிடுங்கும் ஒரு உத்தியே ஆகும். தகவல் பரிமாற்றத்தை பொழுது போக்கிற்காக நவீன தலைமுறை பயன்படுத்தி வருகிறது. முக்கிய நிகழ்வுகளை

தகவல்களாக பரப்பியதுபோய் தும்பலை எல்லாம் கூட முக்கிய தகவலாக பரிமாறி வருகிறார்கள்.

ரகசியங்களை எல்லாம் வெளியில் சொல் வதில் சுவாரஸ்யத்தை எதிர்பார்க்கிறார் கள். கவர்ச்சி, கலவி என தகவல் பாபரிமாற்றம் தன் புனிதத்தைஇழந்துஅசுத்தாமாகிவிட்டது.பிஞ்சு மனம் கூட நஞ்சு களமாகி மாற தகவல்தொடர்பு சாதனங்கள் எளிதாக அனைவரையும் பாலாக்கி வருகிறது. இளைஞர்கள் அதிக நேரம் செலவிடும் இடம் கல்விக் கூடமாக இருந்தது. இப்பொழுதெல்லாம் செல்போன்தான் அவர் களின் கனவுகளைக் கூட சிறைப்படுத்தி சிற்றின்பத்தை பேரின்பமாக காட்டி வருகிறது. தன்னை எல்லோர்க்கும் காட்டிக் கொள்ள ஆர்வப்படுகிறார்கள். பொறை எடுத்ததை பாம்பு கடித்து நுறைதள்ளிய கதையாய் பதிவிகிறார்கள். டிக் டாக், வாட்ஸ்அப், பேஸ் புக், மியுசிக்லி எல்லாம் சுதந்திரப் பறவைகளாய் இருந்த இளைஞர்களை சுருக்கி வட்டத்தினுள் பறக்க வைத்துவிட்டன. பாவம் திகார் இல்லாமலே திவாலாகிறார்கள். தன்னிடம் இல்லாத காரை இருப்பதை போலவே புகைப்படம் எடுத்து காட்டிக் கொள்வதில் என்ன கௌரவம் இருந்துவிட போகிறது. புகைப்பட போதையர்களின் பலருடைய முகமூடிகள் முகநூலில்தான் மாட்டி வைக்கப் படுகின்றன.

பெண் வாழ்வியல் முறையில் இருந்து நம் கலாச்சாரத்தின் சிறப்பு. பெண்ணின் பாதை தவறாகும் போது காலச்சாரத்தின் கண்கள் கட்டப்பட்டுவிடுகின்றன.கலாச்சாரம்சீதையாக இல்லாமல் தாசியாக மாறிவிடுகின்றன.

பொள்ளாச்சி சம்பவம் திராவிட நல் திரு நாட்டின் நற்பெயருக்கு வைத்த முதல் கொல்லி. நுனி நாக்கில் ஆங்கிலம், பொருள்மிகுந்த உடை அலங்காரம், செலவு செய்ய பணம், வயதை ஈர்க்கும் கவர்ச்சி பேச்சு, படிதாண்ட வைக்கும் அணுகுமுறை, நீதான் என் உலகம், ஒருமுறை உன்னை பார்க்கனும் என்றெல்லாம் அணுகி ஒரு பெண்பிள்ளையை வன்கொடுமை செய்ததுமில்லாமல், அவர்களின் ஏமாளித் தனத்தையும், தைரியமின்மையையும் பயன் படுத்தி பணம் பறித்தும் ஒரு கும்பல் உலவுகிறது என்றால் இதுவே நரகம்.

நுண்ணறிவிலும் உணர்ந்து செயல் படுவதிலும் பெண்கள் தேர்ச்சிப் பெற்றவர்கள். சமுதாய போக்கு வெகுசில பெண்களுக்கு மட்டும்தான் தெரிகிறது. பெண்களில் பலர் மாற்று பேருந்தில் ஏறி பயணம் செய்ய கூட தெரியாதவர்களாகவும் இருக்கிறார்கள். கல்லூரி வீடு, அலுவலகம் வீடு என்று வாழ்வை குறுக்கியே வாழும் பெண்கள்தான் எவனோ ஒருவனுடைய பேச்சை கேட்டு ஏமாறுபவர்களாக இருக்கிறார்கள். ஏமாற்றத் திற்கு பிறகு மாற்றம் வருவது மனித சமுதாயத்திற்கு இயல்பு.

ஒருவனிடத்தில் ஏமாற்றப்பட்டோம் என்பதைவிட பெரிய முட்டாள்தனம் வேறில்லை. ஒருவனை ஏமாற்றுகிறோம் என்பதைவிட பெரிய பாவமில்லை. கடின உழைப்பால் சம்பாதிக்கிற பணம் தேவன் ஆசையோடு கொடுக்கிற பணமாகும். கடினப்பட்டு பெற்றோர் உழைத்த பணத்தை ஊதாரியாய் செலவிடும் பிள்ளை பட்டுபோன தென்னம்பிள்ளை. போன்களை மனிதனை தனிமைப்படுத்தி வைத்தான் ஆனால் இன்று போன்கள்மனிதனைதனிமைப்படுத்திவிட்டன. யாருக்கும் தெரியாது என்பது கூட போன் களுக்கு தெரிந்துவிடுகின்றன. சிலருடைய உண்மையான மனதை அவர்களின் போன்



# இலை விழுந்ததால்

இலையொன்று விழுந்தது
காற்றின் தாக்கம்
மழையின் பேரியக்கம்
என எதுவாகவும் இருக்கலாம்
ஆனால் இலையின் மேல் துளிகள்

மரணமொன்று நிகழலாம்
பிறப்பின் சாசனச் செய்தியே
இறப்புக்கான தேதி எழுதுவதுதான்
அப்போது மழை பெய்யலாம்
இல்லையேல்
வெயிலாவது அடிக்கலாம்

இலை விழுந்ததால்
மரம் வீழ்வதில்லை
தாகங்கொண்ட பறவையைப்போல
தேடலைவிரித்துக்
கொண்டேயிருக்கும்
நேரப்புவியிலும் எதிர்ப்புவியிலும்

மரணம் நிகழ்வின் மண்மாளிகையில்
அழுகையின் நீர்த்துளிகள்
அரணாகி ஆண்டொன்றில்
நினைவுகளாகிவிடும்
மாண்டார்கள் மீள்வதில்லையென
மாற்று பயணம் செய்கிறது வாழ்க்கை

வெயிலும் மழையும்
எப்போதும் வரும்
மானுடர்கள் இளைப்பாறுவார்கள்
இலை விழுந்த மரத்தினடியில்...!

**- வீரசோழன் திருமாவளவன்**

களை பார்த்துதான் முடிவு செய்ய வேண்டி இருக்கிறது.

காலம் கெட்டு கெடக்கு பாத்து காலேஜ்க்கு போ. எதுவா இருந்தாலும் எங்கிட்ட சொல்லு உனக்குள்ளேயே வச்சிக்காத என்று குழப்பத்தோடு உலவும் மனதை நீல வானமாக தெளிவாக்க யாரும் அருகில் இல்லாதபோது எதை செஞ்சா இப்ப என்ன தப்பு இந்த காலத்துல இதெல்லாம் சகசம் என்கிற நியாபடுத்தும் எண்ணம் தானாகவே எல்லோர்க்கும் வந்து விடுவது எளிதானதாக ஆகிவிட்டது. பொள்ளாச்சியில் நடந்த பாலியல் சம்பத்தில் மெத்த படித்த ஏற்கனவே திருமணமான பெண்களும் சம்பந்தப்பட்டது தமிழகத்திற்கே அதிர்ச்சி. நீரோடையாய் ஓட விட வேண்டிய மனதை தனிமைப்படுத்தி சமூக வலை தளத்தில் மனதை செலுத்தும்போது யாராவது கவர்ச்சி ததும்ப புகைப்படம் பதிவிட்டால் ரசிக்கிறார்கள். அவா;கள் பேச தொடங்கினால் சந்தோசத்தில் நெருங்கி பழகி முகவரியே தெரியாத முகத்திற்கு நம் உள்ளங்கையில் வைத்திருக்க வேண்டிய ரகசியத்தை கை விரித்து காண்பித்து விடுகிறார்கள்.

முகநூலில் பழகியவனுக்காக அம்மா தடையாக இருக்கிறாளே என்று சொந்த அம்மாவையே கூலிப்படை வைத்து கொன்ற மகள் கொஞ்சம் கூட அம்மாவை கொன்று விட்டோமே என்கிற முகஅயர்வு இல்லாமல் சிறைக்குச் செல்கிறாள் ஒருத்தி. எட்டு ஆண்டுகளுக்கு முன்பு காதல் திருமணம் செய்து கொண்ட ஒருத்தி பிரியாணி கடைக்காரனிடம் தன்னை இழந்து தன் மகன்களையே கொன்றதாய் என்று எத்தனை எத்தனை சோக சம்பவம் நம்மை ஒவ்வொரு முறையும் கதிகலங்க வைக்கின்றன.

தனக்குள்ளே அடங்கி இருக்க தெரிய வேண்டும். தன்னை தானே காத்து கொள்ள பழக வேண்டும். நம் வாழ்வை காக்க தெரியமல்இருப்பது வள்ளுவன் சொல்வதை போல "எரிமுன்னர் வைத்தூர்வது போல கெடும்". ■

நௌசாத் கான். லி

# ஒரு சீதையின் இராமாயணம்

ராம் அந்த பொம்பள புரோக்கரை தேடி அந்த ஊருக்கு வந்திருந்தான்.

சொல்லுங்க சார், உங்களுக்கு யார் வேணும் உங்களை மாதிரி ஒரு நல்லவரை இதுவரை நான் பார்த்ததே இல்லை.

எப்படி சார் இருக்கீங்க ?

உங்களுக்கு யார் வேணும் ??

நான் இங்க வந்து ஒரு ஆறு மாசமாவது இருக்கும் அதுவும் ஒரே தடவை தான் வந்து இருக்கேன்.

என்னை எப்படி இன்னும் மறக்காம இருக்கீங்க?

என்ன சார் அப்படி சொல்லிடீங்க, ஒரே தடவை வந்தாலும் ஒரு மாசத்துக்கு தேவையானதை அள்ளி கொடுத்திட்டு போனீங்களே சார் அதை எப்படி சார் அவ்வளவு சீக்கிரத்துல மறக்க முடியும்.. பேரம் பேசி நாற வேலையை செய்யுறவங்க மத்தியில கேட்ட காசை விட மூணு மடங்கு அதிகமாவே தந்திட்டு அனுப்பின பொண்ணை கூட கண்ணியமா அனுப்பி வச்சீங்களே உங்களை எப்படி சார் அவ்வளவு சீக்கிரத்துல மறப்பேன்.

என்னை மறக்காம இருக்கிறதுக்கு ரொம்ப சந்தோசம், எனக்கு லாஸ்ட் டைம் அனுப்புன பொண்ணையே அனுப்பி வச்சிடுங்க.

எனக்கு அவளை ரொம்ப பிடிச்சிருக்கு எனக்கு வேற எந்த பொண்ணும் வேணாம்.

அட போங்க சார், எந்த நேரத்துல உங்களுக்கு அந்த பொண்ணை அனுப்பி விட்டேனோ அன்றையலிருந்து அந்த பொண்ணு தொழிலையே விட்டிட்டு பக்கத்து ஊர்ல மீன் வியாபாரம் பார்த்துக்கிட்டு ஒத்த பிள்ளையை வச்சுக்கிட்டு கஷ்டப் படுது சார்..

எனக்கு அவ முகவரி வேணும் புரோக்கர்.

புரோக்கரும் அவள் முகவரியை கொடுத்தான், அடுத்த கணம் அவன் பாக்கெட்டில் ரெண்டாயிரம் ரூபாய் நோட்டு ஒரு பத்து தாளை அவன் பாக்கெட்டில் திணித்து விட்டு மின்னல் வேகத்தில் பஸ்ஸை பிடிக்க சென்றான்.



அவன் போனதும் லூசு பையன் ஒரு பொண்ணை கூட அனுபவிக்காம எவளோ ஒருத்திக்காக இவ்வளவு பணத்தை கொடுத்திட்டு போகுது என்று திட்டினான்

அந்த புரோக்கர் கொடுத்த முகவரியை வைத்து கொண்டு அந்த ஊர் செல்லும் பேருந்தில் ஏறியவுடன்ஜன்னல்ஓரசீட்டில்இவன்அதிர்ஷ்டம் இடம் கிடைத்தது அப்போது தென்றலாய் காற்று வீசியது அப்படியே அவன் சொக்கி போய் பின்னோக்கிய நினைவலைகளில் மூழ்கி போனான்.

ஒரு ஆறு மாதத்திற்கு முன்

ஹோட்டல் அறையில் ராம் காத்திருந் தான்வந்ததும்வராததுமாகஅவள்புடவையை கழட்டி ஓரம் வைத்தாள் ஜாக்கெட்டை அவிழ்ப்பதற்கு முன் வேண்டாம் என்றான்.

## ஹைக்கூ

ரசி குணா

புயலும் மழையும்
வீட்டுக்குள் நடந்து முடிந்தது
தலை பிரசவம்.

•

தங்கச் சிலைகள் உள்ளே
வெளியில் சத்தம் போடுகின்றன
பிச்சைப் பாத்திரங்கள்..

•

முட்டையிட்ட கோழி
கலைத்து விட்டுச் செல்கிறது
குழந்தையின் தூக்கத்தை..

•

மாலையுடன் ஆடு
மகிழ்ச்சியாக இருக்கும்
கொலை செய்யும் கூட்டம்..

•

பார்வையற்ற சிறுவனை
அடிக்கடி சிரிக்கவைக்கும்
சில்லறைச் சத்தம்...

•

அதுக்காக தானே வந்து இருக்கீங்க? பின்னே வேண்டாம்னு சொல்லுறீங்க, என்ன பர்ஸ்ட் டைமா, பயமா இருக்கா, பயப்பட வேண்டாம் எல்லாம் நான் சொல்லி தரேன் என்றாள்.

அதுக்காக தான் வந்தேன் ஆனா இப்போதைக்கு அது வேணாம் இது மாதிரியான இடங்களுக்கு வர்றது இதுதான் முதல் தடவை ஆனா எனக்கு ஏற்கனவே கல்யாணமாகி என்னோட ஒரு மூணு மாசம் வாழ்ந்திட்டு கல்யாணத்துக்கு முன்னாடி உள்ள பழைய காதலை மறக்க முடியாம நான் ஆம்பளையே இல்லைன்னு பொட்டை பட்டத்தை சுமத்திட்டு என் பொண்டாட்டி அவன் காதலனோட ஓடி போயிட்டா, ஊர்ல எவனும் மதிக்கிறதே இல்லை நல்லா சம்பாதிக்குறேன் ஆனா மனசுல நிம்மதியே இல்லை, கூட வேலை செய்யுற நண்பர்கள் சொல்லி தான் இங்கே வந்தேன், இங்கே வந்தாலே ரிலாக்ஸ் கிடைக்கும்னு சொன்னானுங்க அதான் வந்தேன் என்றான்.

யோவ் வாழ்க்கைல நடந்த கஷ்டத்தை எல்லாம் மனசுலேயே போட்டு அடக்கி வைக்காதே, சோகம், கோபம், ஆத்திரம், வக்கிரம் எல்லாத்தையும் என்னை மாதிரி உள்ள தேவுடியாகிட்ட தீர்த்துக்கிட்டு போயிடு, உனக்கு என்னய்யா ராஜா மாதிரி ஆம்பளசிங்கம்மாதிரி இருக்கே, என்னைபாரு என் புருஷன் ஒரு புள்ளைய கொடுத்திட்டு இந்த சாக்கடையில தள்ளிட்டு போயிட்டான்.

நல்லா வாழுறதுக்கு எல்லாம் ஒரு கொடுப்பினை வேணும்ய்யா என் தலைவிதி என் புள்ளைக்காக இந்த பாவப்பட்ட தொழிலை செஞ்சுக்கிட்டு இந்த பாழாய் போன உடம்புல உசுரை வச்சுக்கிட்டு சுத்துறேன்.

உன் பேரு என்ன ?

ராம்.

பதிலுக்கு அவன் உன் பேரு என்ன வென்று கேட்டான் ?

சீதா என்றாள்.

பேரு எல்லாம் நல்லா பொருத்தமா தான் இருக்குயா என்றாள்.

சீதா எனக்காக ஒண்ணு பண்ணுவியா?? சொல்லுய்யா.

ஒரு ரெண்டு மணிநேரம் என் மார்புல சாஞ்சுக்கிட்டு இருப்பியா ?

ஒரு நிமிஷம் இருய்யா என்று சொல்லி விட்டு முகச்சாயங்களை எல்லாம் அழித்து விட்டு குளித்து விட்டு ஈர டவலோடு அவனருகே வந்தாள் அவன் நெஞ்சில் முகம் புதைத்தாள் அந்த ரெண்டு மணிநேரம் அவனும் அவளை எதுவும் செய்யவில்லை அவளும் அவனை எதுவும் செய்யவில்லை ஏனோ அவன் விடும் மூச்சு காற்றில் ஆண்மையும் அவள் விடும் மூச்சு காற்றில் பெண்மையும் நிறைந்து காணப்பட்டது... கிளம்பும் தருவாயில் அவள் கையில் ஐந்நூறு ரூபாய் பண்டலை திணித்தான் வேணாம்ய்யா நீதான் ஒண்ணுமே செய்யலையே வேணாம்யா என கெஞ்சினாள்.

இந்த ரெண்டு மணிநேரம் எந்த கவலையும் இல்லாம ரொம்ப சந்தோசமா இருந்தேன் சீதா அதுக்காக தான் இந்த சொற்ப பணம் என்றான்.

யோவ் ஐம்பதாயிரம் பணமெல்லாம் எனக்கு ரொம்ப பெருசுய்யா வேணாம்யா என்றாள். அவள் நெற்றியில் முத்தமிட்டு விட்டு வச்சுக்கோ ப்ளீஸ் என்றான்.

அவள் இந்த முறை மறுப்பு சொல்ல வில்லை யோவ் ஒண்ணே ஒண்ணு கேட்டா தப்பா நினைக்க மாட்டேளே?

சொல்லு சீதா, நீ எது சொன்னாலும் தப்பா நினைக்க மாட்டேன் நீ கேளு என்றான்.

உன் போட்டோ ஒண்ணு தருவியா என்றாள்.

அவள் கேட்டதும் மறுப்பு சொல்லாமல்

# இன்று முதல்...



பொய்மை நிழலின்
கால் இடுக்கில்
நின்றுகொண்டு
கதைத்தும்..

காமப் பசியெடுத்து அலையும்
மனித மனம்போல்
சதா பொருள்தேடி அலைந்து
தனையையும் சேர்த்து தொலைத்தும்..

தவறு செய்து
தவறை திரும்பவும் செய்து
அது தப்பாகி
யாரும் அறியாதபோதும்
என் முகத்தில் என் மனமே
துப்பும்போதெல்லாம்
“இன்றுமுதல்” எண்ணம்
எழுகிறது வீழ்கிறது
அலை அலையாய்...

சில நாட்கள் உள்ளாகவே
நீர் பட்டுக்கரையும்
குயவரின் சுடாத பாண்டமாக
காற்றுப்பட்டு கலையும்
மேகம் கட்டமைத்த உருவமாக
“இன்றுமுதல்” எண்ணம்
சுயம் இழந்திருப்பதை
நீட் தீட்டால்
மருத்துவப்படிப்பை இழந்த
முதல்தலைமுறை மாணவனாய்
இயலாமையுடன் பார்க்கிறேன்...

ஆனால் யாரோ ஒருவருக்கு
சேற்று நிலத்தில் நடப்பவருக்கு
உதவும் ஊன்றுகூலாக
இருக்கத்தான் செய்கிறது

“ இன்றுமுதல் “...

தியாக இரமேஷ்..

போட்டோவை தந்தான்.

யோவ் என் குழந்தைக்கு என்னை விட்டிட்டு போன தெருப்பொறுக்கியை அப்பான்னுகை காட்டுறதுக்குபதில் உன்னை என் குழந்தைக்கு அப்பான்னு சொல்லுறதை பெருமையா நினைக்குறேன்யா, உன் அனுமதியோட நீ தான் அப்பான்னு என் குழந்தைக்கு இந்த போட்டோவ அடையாளம் காட்டவா என்றாள்.

அவன் புன்னகைத்தான் ,சீதா தைரியமா நான் தான் அப்பான்னு நம்ம புள்ள கிட்ட சொல்லுன்னு சொல்லிட்டு அந்த இடத்தை விட்டு சென்றான் ராம்..


பட்டினப்பாக்கம் இறங்குறவங்க எல்லாம் இறங்கு என்று கண்டக்டர் சப்தமிடவும் பழைய நினைவுகளிலிருந்து மீண்டு வந்தான் ராம்.

சரியாக புரோக்கர் சொன்ன ஊருக்கு வந்து விசாரித்தான் மீன் காரி சீதான்னா எல்லோருக்கும் தெரிந்து இருந்தது ஒரு வழியாக ஊர் மக்கள் சொன்னதன் பேரில் சீதாவின் முகவரிக்கு வந்து சேர்ந்தான் ராம், வந்ததும் வராததுமாக அங்கு விளையாடி கொண்டிருந்த ஐந்து வயது குழந்தை ஒன்று இவனை கண்டதும் அப்பா என்று ஓடி வந்து கட்டி பிடித்து கொண்டது ...

குழந்தையின் குரல் கேட்டு சீதா வெளியே வந்தாள், ராமை பார்த்ததும் இப்ப தான் என்னை பார்க்கணும்னு தோணுச்சாய்யா என்றாள்.

ரொம்பசந்தோசமாஇருக்குடி,மன்னிச்சிடு இவ்வளவு டைம் எடுத்துகிட்டதுக்கு உன்னை பிரிஞ்சு இனிமே வாழ முடியாது இந்த ராமை உன் புருஷனா ஏத்திக்குவியா?

இந்த சீதாவோட வாழ்க்கை இனி இந்த இராமனின் காலடியில் தான் என்று அன்போடு அவன் நெஞ்சோடு முகம் புதைத்தாள்!! ■



# தேடிவர மாட்டாயா?

செவ்வரளி நிறத்தழகி சிங்காரப் பேச்சழகி
சிருங்கார நடையாலே தேவலோகப் பெண்ணழகி
மனதினை மயக்கவைக்கும் மகிழம்பூ வாசக்காரி
கரும்பு சக்கையிலும் இனிப்பிருக்கும் நிஜமேதான்
எறும்பு கூட்டங்களும் அதில் மொய்க்க வாய்ப்புண்டு
அரும்பு மணத்தவளே அல்லி மலர்க்கொடியே
ஆடி அசைந்தாலே அல்லல்படும் என்மனசு
தேடிவர மாட்டாயா மாமன் எனைக்காண !



# மச்சானே, உன் நினைப்பில் காத்திருக்கேன் தோப்புக்குள்ள...

அத்தானே உனைத்தானே
வச்சிருக்கேன் மனசுக்குள்ள...
மச்சானே உனக்காக
காத்திருக்கேன் தோப்புக்குள்ள!

காத்தோடக் கைக்கோத்து
அழகாக ஆடி வரும்
தென்னமரக் கீத்தையெல்லாம்
மொத்தமா நான் பாக்கையிலே...
குத்தவச்ச குமரி எனக்கு
கட்டிக் குடுத்த குச்சு வீட்டுக்
காட்சியெல்லாம் காட்டுதய்யா!

நிழலுக்குதான் குடைபிடிக்கும்
மரக்கிளைக்கு இடையினிலே,
புகுந்து வந்து உத்துப்பாக்கும்
சூரியனப் பாக்கையிலே...
மாரியம்மன் திருவிழால
கூடி நின்ன கூட்டத்தில
எட்டி எட்டிப் பார்த்து நின்ன
உன் நினைப்பு வருகுதய்யா!

மாமரத்துக் கிளையினிலே
கட்டி வச்ச கூட்டுக்குள்ளே,
இரையெடுத்து சோடிக்கூட்டும்
மாங்குயிலப் பாக்கையிலே...
பண்டிகைக்கு பலகாரம்
கொண்டுவரும் சாக்கினிலே,
எனக்கு லட்டு ஊட்டிவிட்ட
அந்த நாளை நினைக்குதய்யா!

தென்னமர உடம்பினிலே
உச்சி முதல் பாதம் வரை,
அழகழகா வரைஞ்சு வச்ச
வளையங்களை பாக்கையிலே...
கம்மாக்கரை ஓரத்திலே
யாருமில்லா நேரத்திலே,
கைப்புடிச்சு மாட்டிவிட்ட
வளையல் நினைப்பு வந்ததய்யா!

வானம் பாத்த பூமியிலே
பருவமழை பொய்த்ததிலே
கருகிப் போயி சுருங்கி நிக்கும்
பயிரை நீயும் பாக்கையிலே...
நேரத்தோட வாராம
உன் முகத்த பாக்காம
காத்து நானும் வாடி நிக்கும்
என் நிலைமை புரிஞ்சுக்கய்யா!

மு.கமலகண்ணன்

# அ காலம்

## முனைவர். பெண்ணியம் செல்வக்குமாரி

"நீ என்னதான் சொல்லவரே" வன்னியை நான் சற்று கோபமாத்தான் கேட்டேன்.

"இந்தக் காலத்துப் பசங்க அப்படி இப்படித்தான் இருப்பாங்க" ன்னு அவன் பேசும்போது மிகுந்த கோபம் எனக்கு.*

"என்ன இப்படி பொறுப்பில்லாம பேசற, அப்ப அவங்களுக்கு நாம அட்வைசு பண்ணக்கூடாதா?, பஸ்ல தொங்கிக்கிட்டு போவானுக, டூவீலரை அங்கிட்டும் இங்கிட்டும் வளச்சி நெளிச்சி விட்டு, நம்பள இடிச்சிட்டு ஆக்சிடெண்டு பண்ணிட்டு போவானுவ, அத பாத்துட்டு சும்மா இருக்கனுமா"

"கோபப்படுறதுல ஒரு புரையோசனமும் இல்லே செல்வா, கொணமா வாயால சொல்லணும்"

"போ, மூஞ்சி... நான் இவ்ளோ சீரியசா பேசறேன். நீ சிரிப்புக்காட்ற சிரிப்பு" மெல்ல வன்னி முதுகில் ஒரு அடி கொடுத்தேன்.

"நானும் வன்னியப்பனும் இலக்கிய நண்பர்கள் மட்டுமல்ல, படிக்கும்போதும் நண்பர்கள். எப்போது எங்கே சந்தித்துக் கொண்டாலும், ஊர்ல ஒலக்கதுல நடக்கிற கதையத்தான் விவாதம் செய்வோம். அடிச்சிக்கற மாதிரி பேசுவோம். அப்படியே ஒருத்தருக்கொருத்தர் சரண்டராயிடுவோம். இத்தனைக்கும் இந்த விவாதம் நடந்தேறியது என் வீட்டில் தான். அப்போது என் கணவர் தேநீர் தயாரித்துக் கொண்டிருந்தார்.

"ஜே பி நல்ல தேநீர் போடுங்க, கொஞ்சம் தூக்கலா சர்க்கரை, தவிர செல்வாவுக்கு கொஞ்சம் தூக்கலா உப்பு"

"ஏன் நான் சக்கர நோயாளியா, இல்ல உப்பு நோயாளியா என்ன"

"இல்ல செல்வா, நீ உப்பு சப்பில்லாத விசயத்துக்கெல்லாம் ஆர்கியூ பண்றியா.. அதான்.." கையில் தேநீர் கப்புகளோடு வராந்தாவுக்கு எடுத்து வரும்போதே என்னைக் கிண்டல் செய்த என் கணவர் செயபாலைப் பார்த்து முறைத்தேன்.

"என்ன இருந்தாலும் ஆம்பளங்க ஆம்பளங் களுக்குத்தான் சப்போர்ட் பண்ணுவீங்க"

"ஐயோ, அம்மா தாயே, தொடங்கிட்டியா உன் பெண்ணுரிமைய... எனக்கு வேல கெடக்கு, டீ குடிச்சிட்டு கௌம்பறேன்" வன்னியப்பன் வாசற் படியில் இறங்கி வண்டியை ஸ்டார்ட் செய்து கிளம்பினான். நானும் செயபாலும் விடை கொடுத்தோம்.

ஏனோ எனக்கு வன்னி பேசியது பிடிக்கவில்லை. இவன்மீது மலையளவு உயர்ந்த எண்ணத்தை வைத்திருப்பவள் நான். அவன் பேசும் போதெல்லாம் ஒரு விசயம்னா புள்ளி விவரங்களோடு பேசுவான். உலகியலை அழகியலாக்கிச் சொல்வான். அதுவும் இவன் ஓர் சமூக ஆர்வலர், சமூகச் செயற்பாட்டாளர் வேற.

சமூக உணர்வேயில்லாம ஏன் விட்டேத்தி யாகப் பேசினான்?... யோசித்தபடியே அறைக்குள் நுழைந்தேன்.

என் தலைமுடியை சீவினேன். பாம்பென நெளியும் சாலை நினைவுக்கு வந்தது. அது எப்போதும் எதையாவது இரையாகத் தின்று கொண்டிருக்கிறது. ஆமாம். ஆடுகளை, மாடுகளை, மனிதர்களை,

அதுவும் இளைஞர்களை... அதற்கு மிக்க ருசி இளைஞர்கள் போலும்.

எங்கே பார்த்தாலும் சுவரொட்டிகள் அதில் இருபது, இருபத்திரண்டு வயதுடைய இளைஞர்கள் அகால மரமடைந்தாரென. அந்த மாதிரியான போஸ்டரைப் பாக்கறப்பவெல்லாம் ஒரு விதமான எரிச்சல் வரும். ஏன்தான் இளைஞர்கள் இத்தனை ஸ்பீடா போறாங்களோ? பெத்தவங்க ஏன்தான் வண்டி வாங்கித் தராங்களோ? பூத்துக் காய்ப்பதற்குள் உதிரும் தென்னங் குறும்புகள் மாதிரி இந்த இளைஞர்கள் ஏன்தான் ஆக்சிடெண்ட் அநியாயமா செத்துப்போறாங்களோ?

நம்ம நாட்டில் வாகனங்களுக்குத் தகுந்த சாலைகள் இல்லை. ஆனால் வெளிநாடுகளில் அகலமான சாலைகள். ஒரு சாலையே நான்காகப் பிரித்து கோடிடப்பட்டு இருக்கும். இன்னின்னின்ன வாகனங்கள் அந்தந்தக் கோட்டுக்குள் வழியைப் பின்பற்றித்தான் ஓட்ட வேண்டும் என்பது சாலை விதி. இங்கும் இப்படித்தான் இருக்கு. இருந்தபோதும் சாலைவிதிகளை நம் மக்கள் பின்பற்றுகிறார்களா இல்லையே... குறிப்பாக இந்த இளையதலைமுறைகள்... ரொம்பவே மண்டைக்குள் குடைந்து கொண்டிருந்தது இது.காரணம் மாலையில் அவள் அலுவல் முடித்து வரும்போது ஒரு சாலைவிபத்தைக் காண நேரிட்டது. எல்லாரும் சுற்றிக்கூடியிருக்கவே அதைக் காணாமல் கடந்து வந்து விட்டேன்.

“செல்வா, ரூம்ல என்ன பண்ற?, வா, குழந்தைங்க பள்ளி விட்டுவந்திருக்காங்க பார். ஏதாவது தின்ன ஸ்நாக்சு கொடு» என் கணவர் அழைத்தவுடன்தான் அந்த நினைவிலிருந்து விடுபட்டு வராந்தாவிற்கு வந்தேன். குழந்தைகளைக் கவனித்தேன். சமையலறைக்குள் நுழைந்தேன். மீண்டும் அந்த நினைவு. அதோடு என்னவானான் அந்தத் தம்பி... ஏன் இன்று பேருந்தில்



# வெட்கமே உனது மொழியா?

காதலிக்கத் துணிந்துவிட்டாய் ..
கதைத்திடத்தான் தயங்குகிறாய் ..

கதைத்திடவே வரும் நீ
புன்னகைத்துக் குனிகின்றாய் ..
நீ கதைப்பதில்லையானாலும்
புன்னகைத்துத் தலை
குனிவதைப் பார்த்தே நான்
மனங் குளிர்கின்றேன் ..

உன் புன்னகையால் வரும்
கன்னக்குழிகளில் நான் வீழ்ந்தே
அதை ரசிக்கின்றேன் ..

கேள்விக்கு மேல் கேள்வி கேட்டும்
மௌனமாகவே நிற்கின்றாய் ..
அத்தி பூத்தாற்போல் சில கேள்விகளுக்கு
ஆம் என்ற பதிலைத் தருகின்றாய் ..

என் முகம் பார்த்த உன்
பதில் சொற்களை ஆவலாய்க் கேட்டிட
ஆசையாய் நிற்கின்றேன் ..

சொல்ல வருவதைச் சொல்லாமல்
நிலம் பார்த்து நின்றவளாய்
உன் பாத விரல்களால்
நிலத்தோடு கதைக்கிறாய் ...

எதையாவது சொல்லிடு என்றாலும்
வெட்கித்துத் தலை குனிகிறாய் ..
ஏக்கமதை மனஞ் சுமந்து
ஏமாந்து போகிறேன் ..
அப்படியானால் .. அன்பே ..
வெட்கமே உனது மொழியா ?

**கலா வர்ணன் -**
**எஸ்.எஸ்.எம்.றபீக்**

## தன்முனைக் கவிதைகள், அந்தாதியில்...

பவுர்ணமி நிலவின்
பாலொளியில் தெரிய
வெளிப்படும் அவள் முகம்
வெளியேற்றும் அன்றைய கவலைகளை

கவலைகளை உள்வாங்கி
கனத்துப் போகும் நெஞ்சம்
ஆகிவிடுகிறது ஒருநாள்
அனுபவப் பாடசாலையாய்

சாலையோரம் காசுக்காய்
கையேந்தும் கரங்களுக்குப்
பதிலாகத் தருவதோ
சில்லறையில்லை என்னும் பொய்

இல்லையென்பதும் ஓர்
இயலாமை தான்
எப்போதும் நிலைநிறுத்து உன்
இருப்பை நிகழ்காலத்தில்

நிகழ்காலம் எரியுந் தீ
இறந்தகாலம் சாம்பற் தூள்
எதிர்காலம் பற்றுமோ பற்றாதோ
இன்றே குளிர்காய்ந்து விடு

**கவிஞர். இளவல் ஹரிஹரன்,**
மதுரை.

வரவில்லை. அவன் பெயர் என்ன? அவன் எந்தக் கல்லூரியில் படிக்கிறான். ஏதும் தெரியாது எனக்கு. நான் ஏறும் போது அவனைப் பார்த்தால் சின்னப்புன்னகையை உதிர்ப்பான். அவ்வளவே. அந்த ஆக்சிடெண்ட் பத்தியும் கூடவே இவன் நினைவும் ஒன்று சேர்ந்தாற்போல் வருகிறது. ஏனென்று புரிய வில்லை எனக்கு.

எனக்குத்தினமும்காலையில்வேலைக்குப் பேருந்தில் செல்வது வழக்கம். பேருந்தில் சில நேரங்களில் கூட்ட நெரிசலாக இருக்கும். நிற்க இடம் கிடைக்காது. அந்தத் தம்பி தன் சீட்டிலிருந்து எழுந்து இடம் தருவான். எனக்கு மட்டுமல்ல, வயதானவர்கள் கர்ப்பினிப் பெண்கள் பேருந்தில் ஏறினால் தன் சீட்டில் அமர வைப்பான்.

நான் எதேச்சையாக பார்க்க நேரிடுகின்ற போது ஒரு புன்னகையை உதிர்ப்பான். ஏன் அவனைச் சுற்றியே என் எண்ணம் வட்டமிடுகிறது. அதுவும் காற்றில்லா பூட்டிய அறையாகப் புழுங்குகிறது.

“செல்வா, இங்க வாயேன்...டிவில விவாத மேடையைப் பாரேன்... மேற்குத் தொடர்ச்சிமலை படம் குறித்துப் பேசறாங்க வாயேன்'' என் கணவர் ஜெபி அழைத்ததும்தான் அந்த எண்ணவலையிலிருந்து விடுபட்டேன்.

‘‘தோ... வரேங்க...''

“சினிமாவின் புதிய தரிசனம் என்று பேசியது பிடித்திருந்தது. ரெண்டு நாளுக்கு முன்னாடிதான் அந்தப்படத்தைப் பார்த்து விட்டு வந்திருந்தேன். அதுவும் கடைசி சீன் கனம் மனத்தைக் கவிழ்த்த நிலையோடு தியேட்டர் விட்டு வெளியே வரும்போது, அந்த பேருந்தில் வருமே அந்தத் தம்பி புன்னகைத்தான்.

திரும்ப புன்னகைக்க முயன்றேன். வீட்டுக்கு வந்தும் சுலபத்தில் மீள முடியா உணர்வை அந்தப் படம் உண்டு பண்ணிக் கொண்டிருந்தது. கூடவே அவன் புன்னகைக்குப் பதில் புன்னகையைச் சரியாக உதிர்க்கவில்லையே என்ற குற்றவுணர்வும். ரப்பர்பேண்டில் என்னைக் கட்டிக் கொண்டு இருவேறு திசைகளில் இழுபடுவதாய் உணர்ந்தேன். படுக்கைக்குப் போகுமுன் ஏதாவது புத்தகத்தை அரைமணி நேரமாவது படித்தால்தான் தூக்கம் கொள்ளும். வார இதழொன்றை எடுத்து வாசிக்க ஆரம்பித்தேன்.

ஏனோ மனம் அதில் லயிக்கவில்லை. இறுக்கமும் இழுப்புமாய் என் நினைவலைகள் கிடந்தன. அப்படியே அயர்ந்து தூங்கிப் போனேன்.

அடுத்தநாள் எழுந்த முடியவில்லை. தலை பாரமாய் வலித்தது. ஐயோ... பள்ளிக்குக்

கிளம்ப வேண்டும். அதற்குள் காலை உணவு, மதிய உணவு தயாரித்துக் கணவருக்கு, குழந்தைகளிக்கு என வகையாக அடுக்கு பாத்திரங்களில் எடுத்து வைப்பது இருக்கே... அது யானையக் கட்டித் தீனி போடுவது போல...

அந்த நேரம் வந்து பாருங்க என்னைப் போன்றோர்களை அடுக்களையில்.. காலச்சக்கரத்தை விட மிக வேகமாக ஒடுவாள் பெண். அப்போது புரிபடும் உங்களுக்கு. ஆணாக இருப்பது பெண்ணைவிட எத்தனை சுலபமென்று. ம்.. புரிந்து கொள்வீர்கள். இங்கே காசி ஆனந்தனுடைய வரிகள்தாம் நினைவுக்கு வருகிறது. ஏடுகளில் - முன்பக்க அட்டையில்... வீடுகளில் - பின்பக்கத்தில்/ அடுப்பங்கரையில்.. எப்படிப்பட்ட வலி நிறைந்த வரிகள் இவை.

டிவியைப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன். மனம் ஏனோ அதில் லயிக்கவில்லை. இன்று மாலை வரும் வழியில் பார்த்த அந்த ஆக்சிடெண்ட் ஞாபகத்திற்கு வருகிறது. யாரென்று எட்டிப் பார்க்கவில்லை. டூவீலர் ஆக்சிடெண்ட் என்று சொன்னார்கள். இளைஞர்கள் இருவர் என்றும் சொன்னார்கள். இரத்தத்தைப் பார்த்தால் ஏனோ எனக்கு மயக்கம் வரும்.

இப்படி அடிக்கடி ஆக்சிடெண்ட் நடப்பது ரொம்ப அதிகமாயிட்டு. நிறைய இளைஞர்கள் தாம் சாகறாங்க. இவர்கள் சாகசம் எனும் பேரில் வேகமாக வண்டி ஓட்றது. ஸ்பீடு பிரேக் பார்க்காம ஓட்றது, தாறிமாறா வளைச்சி வளைச்சி ஓட்றது....பந்தயம் கட்டி குறிப்பிட்ட நேரத்தில் ஓட்ட பந்தயம் கட்டி ஓட்றது, ஓவர்டேக் பண்றது, மொபைல் காதுல வச்சிகிட்டே வண்டி ஓட்றது..

அதுக்குதான் ஹெல்மெட் போடனும்னு அரசாங்கம் சொல்லியது. கேட்கிறார்களா? பைன் கட்டினாலும் பரவால்லன்னு ஓட்றது...

தமிழ்நாட்டில் ரோடு வசதி எப்படி இருக்கு. நேத்துதான் ரோடு போடுவாங்க, அடுத்தநாள் மின்சாரம், தண்ணிகானு போடுவதற்குக்கு தோண்டி எடுப்பாங்க. அப்படி எடுக்கறவங்க சரியா மூடுவாங்களா.. ம்கூம் பள்ளமாவே கெடக்கும்.. ஐயோ.. என்ன இன்று இரவு வரைக்கும் ஆக்சிடெண்ட் நெனப்பே வருதே, ஏன்? ‘எல்லாம் வேடிக்கைதான் நமக்கு நடக்காமல், பிறர்க்கு நடக்கும் வரை’ என்ற எப்பவோ மனதில் படிந்த பொன்மொழி நினைவுக்கு வந்தது. ஒருவேளை நான் பார்த்து விட்டு வந்திருந்தால், இப்படிப்பட்ட எண்ணங்கள் தோன்றாதோ.. ஆக்சிடெண்ட்டை போய் பார்த்து, ஏதாவது உதவி செய்திருந்தால் இந்தக் குற்றவுணர்வு வந்திருக்க வேண்டும்.

“ஏம்மா செல்வா, பஸ்ஸுக்கு நேரமாச் சில்லே. அப்புறம் ஓடுற பஸ்ஸ தொரத்திக்கிட்டுப் போகச் சொல்வே, சீக்கிரம் வா.” அவசரமாக அழைத்த என் கணவனுக்கு என்ன பதில் சொல்வது? ஆத்திரம்தான் வந்தது. எல்லாத்தயும் ஏறக்கட்டிட்டு இல்ல வரணும்.

‘‘தோ, வந்துட்டேங்க’’ கணவரின் டூவிலரில் ஏறினேன். பஸ்ஸ பிடிக்க இன்னும் மூன்று நிமிடம்தான் இருக்கு. அந்த பஸ்காரன் கொஞ்சங்கூட நிறுத்தமாட்டான். ம்.. என்ன செய்வது.. இதுவே பொழப்பா, இதுவே தினவாழ்வா ஓடிட்டிருக்குது.

டூவீலரை விட்டு இறங்கி எதிர்திசையில் நின்றிருந்த பஸ்ஸைப் பிடிக்க வேகமாக நடந்தேன். லேசாக பஸ்ஸை உருட்டுவது மாதிரி தெரிந்தவுடன் ஓட முயற்சி த்தேன்.

அப்போதுதான் மெதுவாக நகரும் பேருந் தின் பின்பக்கத்தைக் கண்டு திடுக்கிட்டேன். பேரதிர்ச்சியில் உறைந்தேன். என் தலை துண்டுப்பட்டு அந்த பேருந்தின் டயரின்கீழ் நசுங்குவதாக உணர்ந்தேன்.

ஐயோ! தலை சுற்றுகிறதே...

பேருந்தின் பின் சுவரொட்டியில் அந்தப் பெயர் தெரியாத இளைஞனின் முகம் கண்ணீர் அஞ்சலியில்...

அதைக் கண்டு அகால மரணமடைந்தது நான்தான். ■

# புரட்சிப் பாவலர் புதுவைச்சிவம்

## முனைவர் சிவ.இளங்கோ

புதுவை முத்தியால்பேட்டை தளவா வீராசாமி வீதியில் பாரம் பரியமாக வாழ்ந்து வந்தவரான தளவா வீராசாமி அவர்களின் பெயரனாகவும், சண்முகவேலாயுதம் - விசாலாட்சியம்மாள் ஆகியோரின் மகனாகவும் 23.10.1908 இல் 'புதுவைச் சிவம்' என்றழைக்கப்படும் சிவப்பிரகாசம் பிறந்தார். திண்ணைப் பள்ளியிலும் பின்னர் அரசுப் பள்ளியிலும் பிரெஞ்சும்தமிழும்பயின்றார். சைவத்தில் திளைத்திருந்த தாத்தாவையும் மீறி 'குடுமி' களைந்து 'கிராப்' வெட்டிக்கொண்டார். குலத்தைக் கெடுக்க வந்த கோடாரிக் காம்பாக குடும்பத்தினரால் பேசப்பட்டார். எதையும் 'ஏன்' என்று கேட்டுத் தேடலிலேயே வளர்ந்துகொண்டிருந்தார். அந்நாட்களில் படிக்கக்கூடாத பத்திரிக்கையான 'குடிஅரசு' இதழ் படித்ததனாலும், 1926 ஆம் ஆண்டில் புதுவை, முத்தியால் பேட்டையில் பெரியார் ஈ.வெ.ரா. பேசிய பேச்சினால் கவரப் பட்டதனாலும், சமூகச் சீர்த்திருத்தப் பணிகளுக்காகத் தன்னை ஒப்புவித்துக் கொண்ட அவர், இயக்கப் பொறுப்பேற்றுச் சுயமரியாதை இயக்கக் கவிஞராகத் திகழ்ந்தார்.



1926 ஆம் ஆண்டு ஓர் ஆத்திக மாநாட்டில் எதிர்ப்புக் கணைகளைத் தொடுத்துக் கொண்டிருந்தபோது, அதே எண்ணத்தில் இருந்த சுப்புரத்தின வாத்தியாரைக் (பாரதிதாசன்) கண்டு, தோழமை பூண்டார். அவரிடமே யாப்புப் பயிலத் தொடங்கினார். 1930 இல் பாரதிதாசனுடன் இணைந்து 'புதுவை முரசு' இதழை நடத்தி வந்தார். புதுவை முரசின் நிர்வாகியாகவும் பொறுப்பாசிரியராகவும் பணியாற்றிய சிவப்பிரகாசனார், அதில் பல கட்டுரைகளும் தலையங் கங்களும் எழுதிவந்தார். அவை பிரிட்டிஷாருக்கு எதிராக இந்திய மக்களைத் தூண்டுகின்றன என்று பிரிட்டிஷ் அரசு அதன் ஆளுகைப் பகுதிகளில் தடை விதித்தது. அனைத்து அந்நிய ஏகாதிபத்தியங்களும் இந்தியாவை விட்டு நீங்க வேண்டும் என்றும், கிறித்துவ மதத்திலும் அன்று நிலவிய அவலங்களைப் போக்கவேண்டும் என்றும் சிவப்பிரகாசனார் எழுதியதால், பிரெஞ்சிந்தியப் பாதிரிமார் களால் அவர்மேல் வழக்குத் தொடரப்பட்டு 1932 ஆம் ஆண்டில் அவருக்கு 6 மாதச் சிறைத் தண்டனையும், 500 பிராங்க் அபராதமும் விதிக்கப்பட்டன.

சிவப்பிரகாசனார் அந்நியச் சக்திகளின் ஆதிக்கத்தைத் தொடர்ந்து எதிர்த்து வந்தார். 1936

இல் சவானா மில் தொழிலாளர்கள் துப்பாக்கிச் சூட்டுக்கு ஆளானபோது தொழிலாளர்களுக்கு ஆதரவாகப் போராட்டத்தில் பங்கு பெற்றார். துண்டறிக்கை, கவிதைகள் மூலமாகத் தொழிலாளர்கள் மட்டுமின்றி மக்களையும் உணர்வுப்பூர்வமாகப் பங்குகொள்ள வைத்தார். இறுதியில், தொழிலாளர்களுக்கு வெற்றி கிடைத்தது. ஆசியாவிலேயே முதன் முறையாக புதுவைத் தொழிலாளர்களுக்கு 8 மணி நேர வேலை, சங்கம் அமைக்கும் உரிமை மற்றும் பல சலுகைகள் கிடைத்தன.

தொழிலாளர் உரிமைகளுக்காகவும், அவர்கள் மேன்மை பெறவும் காலமெல்லாம் பாடுபட்டவர் அவர். 1930 களிலேயே பொதுவுடைமைக் கோட்பாட்டுக் கவிதைகள், நாடகங்கள், இசைப் பாடல்கள் என அவரது படைப்புகள் அமைந்தன. இறுதிவரை அவரது கவிதைகளில் தொழிலாளர் நன்மையும் சமத்துவப் பொதுவுடைமைக் கொள்கைகளும் பெருமளவில் இடம்பெற்றன.

பாரதியார், பாரதிதாசன் வழியில் தனது கவிதைகள், கட்டுரைகள் மூலமாக நாட்டுமக்களின் விடுதலை உணர்வினைத் தூண்டி வந்தார். 1954 இல் புதுச்சேரி இந்திய யூனியனுடன் இணையப் பெரும் பங்காற்றினார். புதுச்சேரி விடுதலைப் போராட்டத்தில் திராவிட இயக்கங்கள் ஈடுபட்டுப் போராடக் காரணமானார். அறிஞர் அண்ணாவையும், தமிழகத்தின் அரசியல் கட்சித் தலைவர்களையும் சந்தித்து அவர்களின் ஆதரவு பெற்று, புதுச்சேரியிலும் திருவாளர்கள் இருளஞ்சந்தை ஆர்.எல். புருஷோத்தம ரெட்டியார், எஸ்.ஆர். சுப்பிரமணியன், செல்லான் நாயகர், பெருமாள் அவோக்கா, வ.சுப்பையா ஆகியோருடன் புதுச்சேரி விடுதலை முன்னணியில் இணைந்து பணி யாற்றினார். அம்முன்னணியின் கடலூர் மாநாட்டில் பாசிச எதிர்ப்பு உரையாற்றினார். தொடர்ந்து விடுதலைக்கான போராட்டங்களைத் திட்ட மிட்டும், தமதியக்கச் சார்பில் தலைமை யேற்றும் நடத்தினார் சிவப்பிரகாசம்.

பிரெஞ்சு அரசாங்கம் அவருக்குக் கொடுத்த குடியுரிமையை வேண்டாமென்று உதறித் தள்ளிவிட்டுப் புதுச்சேரி மண்ணிற் காகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்டார் சிவப்பிரகாசனார். பிற்காலத்தில் விடுதலை வீரர்களுக்கான தாமிர பத்திர விருதையும், உதவித் தொகையையும் வாங்க மறுத்துவிட்டார் அவர்.

சிவப்பிரகாசனாரின் தமிழ்த்தொண்டு அளவிடற்கரியது. பிரெஞ்சிந்திய கல்வித் திட்டத்தின்படி 'பிரவே'தேர்வில் வெற்றிபெற்றுப் பல்லாண்டுகள் தமிழாசிரி யராகப் பணிபுரிந்ததுடன் தனிப்பட்ட முறையில்தமிழ்வகுப்புநடத்திப்பலபேருக்கு இலவசமாகத் தமிழ் பயிற்றுவித்தார். பல இலக்கிய அமைப்புகளை நடத்திப் பலருக்கும் மொழிப் பயிற்சி, பேச்சுப் பயிற்சி அளித்து வந்தார். பல ஏடுகளிலும் இதழ்களிலும் கவிதை, கட்டுரைப் பணிகள் புரிந்து வந்தார்.

இயற்றமிழ் வளம் பெறப் பல நூல்கள் அளித்தவர் அவர். 1932 ஆம் ஆண்டில் அவரது முதல் கவிதை வெளியீடு 'புதுவை நெசவுத் தொழில் ஏழையர் எழுச்சிப் பாட்டு' என்ற தலைப்பில் வெளியானது. தொடர்ந்து அவர் எழுதிவந்த கவிதைகள், கட்டுரைகள், இசைப் பாடல்கள், சிறுகதைகள், மொழிபெயர்ப்புகள் ஆகியவை தொடர்ச்சி யாக திராவிட இயக்க இதழ்களில் இடம் பெற்றுவந்தன. 'மறுமலர்ச்சிக் கவிதைகள், 'மறக்குடி மகளிர், 'கைம்மை வெறுத்த காரிகை, 'காதலும் கற்பும், 'தமிழர் தன்மதிப்புப் பாடல்கள்' போன்ற அவரது கவிதை நூற்கள் குறிப்பிடத்தக்கவை. அவர் எழுதிய 'தமிழிசைப் பாடல்கள், 'தன்மதிப்புப் பாடல்கள்' போன்றவை இசைத் துறையில் தமிழுக்கு ஏற்றம் தரும் வகையில் அமைந்தன.

நாடகத்திற்காக அவர் ஆற்றிய பங்கும் மகத்தானது. 1930களில் அவரது நாடகங்களில் பல மேடையேறின. அவர் இயற்றிய அனைத்து நாடகங்களும் பகுத்தறிவு, ஒடுக்கப்பட்டோர் விடுதலை, பெண்ணுரிமை, தன்மானம், உழைப்போர் உரிமை கோரும்



# தமிழும் நானும்

அகத்திருள் நீக்கியே
அறிவொளி ஏற்றியே
அன்பின் வழி நிற்குமே
அரும் பெரும் என் தமிழ் !

ஆதியில் தோன்றியே
அகிலத்தில் ஓங்கியே
பெருமைகள் தாங்கியே
மகிமை கொள் செந்தமிழ் !

முச்சங்கம் வளர்த்ததே
முதன்மை பெற்றுயர்ந்ததே
மொழியதன் பெருமைக்கு
அழியாப் புகழ் பெற்றதமிழ் !

காப்பியங்கள் கண்டதே
காவியங்கள் கொண்டதே
புலமையில் மூத்த பல
புலவர்கள் வளர்த்த தமிழ் !

இலக்கியம் இதிகாசம்
தொல்காப்பியம் திருக்குறள்
அகநானூறு புறநானூறென்று
அழகாய் அணி சேர்த்த தமிழ் !

அன்னியம் சூழ்ந்த போதும்
ஆதிக்கம் நிகழ்ந்த போதும்
குமரிக்கண்டமதைகடலேஉண்டபோதும்
அழிந்திடாத தொன்மைத்தமிழ் !

**- வேலணையூர் ரஜிந்தன்**

நாடகங்களாகவே அமைந்தன. அவற்றிலும் பெரும்பாலானவை மேடை நாடகங்களாக இருந்தன. புதுவை, தமிழகம் மட்டுமின்றி இலங்கை, மலேசியாவிலும் அவரது நாடகங்கள் நடத்தப்பட்டன. அவரது நாடகங்களில் ‘கோகிலராணி, ‘சிதைந்த வாழ்வு,‘சமூகசேவை’ஆகியனநூல்களாகவும் வெளியிடப்பட்டன.

வறுமையில் சிவப்பிரகாசனார் வாட்ட முற்றாலும் பதிப்பகத் துறையில் ஈடுபட்டுத் தனது ‘ஞாயிறு நூற்பதிப்பகம்’ வாயிலாகப் பல அறிஞர்பெருமக்களின்நூல்களைவெளியிட்டுத் தமிழுக்குச் சிறந்த பணியாற்றினார். குறிப்பாகப் பெரியார், அண்ணா, பாரதிதாசன் ஆகியோரின் முற்காலப் படைப்புகள் பலவும் புதுவைச்சிவம் முதலில் வெளியிட்ட பதிப்புகளில் அடங்கும்.

பல காலகட்டங்களில் பல்வேறு தமிழ் இதழ்களை நடத்தி வந்தவர் சிவப்பிரகாசனார். ‘புதுவை முரசு, ‘கவிதா மண்டலம், ‘தொழிலாளர் மித்திரன், ‘ஞாயிறு, ‘சுடரொளி, ‘போர்வாள்’ போன்ற இதழ்கள் சிறந்த எடுத்துக்காட்டுகள்.

தான் வாழும் சமுதாயம் உயர்வடைவதே தன் உயிர் மூச்சென இறுதிவரை பாடுபட்டவர் சிவப்பிரகாசனார். பெண்ண டிமை தீர்வதற்கென அவர் கொடுத்த குரல் ஓங்கி ஒலித்தது. பெண்ணுரிமை, பெண் கல்வி, பொருந்தாமணக் கண்டனம், விதவை மறுமணம் ஆகியவற்றை நடைமுறைப் படுத்த சமுதாயத்தில் தனது கவிதைகள் மூலமாக எழுச்சியை ஏற்படுத்திய தோடன்றி நடமுறையிலும் அவற்றை நடத்திக்காட்டிய சாதனையாளர்சிவப்பிரகாசனார்.ஆயிரத்திற்கு மேல் சீர்திருத்தத் திருமணங்களைத் தலைமை ஏற்று நடத்தி வைத்தார் சிவப்பிரகாசனார். அவற்றில் பல விதவை மறுமணங்கள். மேல்-கீழ் எனப் பிரிக்கப்பட்ட சாதி சமுதாய அமைப்பை அவர் மிகவும் சாடினார். சாதிகளற்ற சமதர்மச் சமுதாயமே அவர் வாழ்வின் இலட்சியச் சவாலாக இருந்தது.

மறுமலர்ச்சி எண்ணங்களை மலர வைத்த மாபெரும் சாதனையாளர் சிவப்பிரகாசனார்.

மூடப்பழக்க வழக்கங்கள் முற்றிலுமாகத் தொலையவும், நாடு முன்னேறி நன்னெறியில் வாழவும், மதவெறியின் மனப்போராட்டங்கள் மாய்ந்து போகவும், மக்களாட்சித் தத்துவங்களை மக்கள் உணரவைக்கவும், வறுமையும் வாட்டமும் நிலவும் சமுதாயத்தைச் செழுமையும் செல்வமும் கொண்டதாக ஆக்கவும் அவருடைய சிந்தனைகளும் செயல்களும் ஒன்றுபட்டு அமைந்தன.

சுயமரியாதை இயக்கந்தொட்டு திராவிடஇயக்கங்களைத்தலைமையேற்று வழிநடத்தியவராக சிவப்பிரகாசனார் இருந்தாலும், அனைத்துத் தரப்பினரின் நன்மதிப்பினையும் அவர் பெற்றிருந்தார். அவருடைய இணைக் காலத்தில் பெரும் அரசியல் சக்திகளாக விளங்கியவர்களான திருவாளர்கள் பாரதிதாசன், ஜோசப் தாவீது, குபேர், ஆர்.எல். புருஷோத்தம ரெட்டியார், வெங்கடசுப்பா ரெட்டியார், வ.சுப்பையா, அன்சாரி துரைசாமி ஆகியோருடன் பல காலகட்டங்களில் இணைந்து பணியாற்றினார். 1968 இல் சிவப் பிரகாசனார் புதுவையின் துணை மேயராகவும், முத்தியால்பேட்டை மேயராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1969 ஆம் ஆண்டில் நாடாளு மன்ற மேலவைக்கு திமுக சார்பில் தேர்வு செய்யப்பட்டு நாடாளுமன்ற மேலவைத் திமுக கொறடாவாகப் பணியாற்றினார்.

பல தலைவர்களோடும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர் சிவப்பிரகாசனார். தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, பாரதிதாசன், நாவலர், கலைஞர் போன்றோரோடு நெருங்கிப் பழகியவர். பாராளுமன்ற மேலவைக் கொறடாவாகப் பணியாற்றி வந்த அவர், பெருந்தலைவர் காமராசருடன் கொண்டிருந்த நட்பின் காரணமாக நாடாளுமன்ற மாநிலங்களவையில் (1969-75) கட்சி வேறுபாடின்றித் தமிழக உறுப்பினர்கள் ஒருங்கிணைந்து செயல்படப் பாலமாக இருந்தார். நாடாளுமன்றத்தின் புதுவைப் பிரதிநிதியாக சிவப் பிரகாசனார் பணியாற்றும் போது புதுச்சேரியின்



முனைவர் சிவ.இளங்கோ.

அனைத்துப் பிரச்சனைகளையும் நாடாளு மன்றத்தில் எதிரொலிக்க வைத்தார். புதுச்சேரிக்குக் கூடுதல் நிதி ஒதுக்கீடு, கடலூர், புதுவை, மரக்காணம் வழியாகச் சென்னைக்குத் தனி ரெயில், புதுவையின் தனித் தன்மையை காக்கப் பாடுபடுதல், புதுவையில் வாழும் பிரெஞ்சுக் குடிமக்களின் உரிமை காத்தல், புதுச்சேரி விடுதலைப் போர்வீரர்களின் நியாயமான கோரிக்கை நிறைவேற்றல், புதுச்சேரிக்கு மாநிலத் தகுதி, பாரதிதாசன் தபால் தலை, புதுச்சேரி நகர அமைப்பு விரிவாக்கத் திட்டங்கள் என்று அனைத்துப் பிரச்சினைகளையும் நாடாளுமன்ற மேலவை யில் எதிரொலிக்க வைத்தவர் சிவப்பிரகாசனார்.

புதுச்சேரியில் பல இலக்கிய அமைப்பு களையும், சமுதாய மன்றங்களையும் தொடக்கித் தமிழ்ப் பணியும் சமுதாயப் பணிகளும் செய்து வந்தார் புதுவைச்சிவம். பல அமைப்புகளுக்குப் பாரதிதாசன் தலைவராகவும், புதுவைச்சிவம் செயலாளராகவும் பணியாற்றி வந்தனர். புதுவைச்சிவம் என்று புனைப்பெயர் கொண்ட சிவப்பிரகாசனாருக்குத் தமிழக அரசு 1983ல் 'பாரதிதாசன் விருது' அளித்துப் பெருமைப்படுத்தியது.



# நீந்தத் தெரியும் மீண்டுவர முடியவில்லை விதி!

தமிழ்நெஞ்சம் அமின்

புதுச்சேரியில் பாரம்பரியம் மிக்கவராக, தனித்தன்மைகொண்டவராக,தமிழாசிரியராக, சமதர்மக் கவிஞராக, எழுத்தாளராக, நாடக ஆசிரியராக, பதிப்பாளராக, இதழாசிரியராக, மொழிபெயர்ப்பாளராக, திறனாய்வாளராக, இலக்கியவாதியாக, மறுமலர்ச்சியாளராக, சீர்திருத்தவாதியாக, பெண் ணுரிமை பேணியவராக, தொழிலாளர் தோழராக, விடுதலை வீரராக, தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபட்டவராக மேலும், இவை அனைத்திற்காகவும் வாழ்வைப் போராட்டக் களமாக்கிக் கொண்டவர் சிவப்பிரகாசனார். திராவிட இயக்கத்தின் படைப்பாளியாக மட்டும் இல்லாமல் இயக்கவாதியாகவும் அவர் திகழ்ந்தார். 1989 ஆம் ஆண்டில் தனது 81 ஆம் வயதில் அவர் மரணமடைந்தார். தன்னுடைய மரணச் சீட்டைக் கூட அவர் தானே எழுதிவைத்திருந்தார். மரணத்திற்குப் பின்னரும் தன்னை வைதீகம் சூழலாகாது என்ற அவரது விழிப்புணர்வே அதற்குக் காரணம்.

கவிஞர்சிவப்பிரகாசனாரின்பணிகளைத் தொடரும் வகையில், 1993 ஆம் ஆண்டில் 'கவிஞர் புதுவைச்சிவம் இலக்கியப் பேரவை' என்ற அமைப்பு புதுவைத் தமிழறிஞர்களால் உருவாக்கப்பட்டது. புதுவைச்சிவம் பிறந்தநாள், அரசு விழாவாகக் கொண்டாடப்படும் என்று புதுச்சேரி அரசு அறிவித்து, 1997 ஆம் ஆண்டு முதல் கொண்டாடி வருகிறது. புதுவை அரசின் கலை பண்பாட்டுத் துறை மூலம் கவிதை நூல்கள் தொகுக்கப்பட்டு 1997ஆம் ஆண்டிலும், புதுவைச் சிவத்தின் எட்டு நாடகங்கள் தொகுக்கப்பட்டு 2000 ஆவது ஆண்டிலும் வெளியிடப்பட்டன. 2002 ஆவது ஆண்டில் புதுச்சேரி அரசால் புதுவைச்சிவம் முழு உருவச்சிலை புதுச்சேரி, காமராசர் சாலையில் அமைக்கப்பட்டு, ஆண்டுதோறும் அவரது நினைவுநாளும், பிறந்தநாளும் புதுவை அரசின் செய்தி விளம்பரத்துறையால் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆய்வு நிறுவனம், புதுவைச்சிவம் கவிதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து 2003 ஆம் ஆண்டில் வெளியிட்டது. அதே நிறுவனத்தில் புதுவைச் சிவம் இலக்கியப் பேரவை சார்பில் "புதுவைச் சிவம் அறக்கட்டளை" 2004 ஆம் ஆண்டு நிறுவப்பட்டு, ஆண்டுதோறும் கருத்தரங்கம் நடைபெற்று வருகிறது. கவிஞர் புதுவைச்சிவம் நூற்றாண்டை (2007 / 2008) புதுச்சேரி அரசும், புதுச்சேரி, தமிழகத்தைச் சேர்ந்த பல்வேறு தமிழ் அமைப்புகளும், அரசியல் கட்சிகளும் கொண்டாடின. புதுவைச்சிவம் படைப்புகளைத் தமிழக அரசு அவரது நூற்றாண்டில்நாட்டுடைமைஆக்கியுள்ளது. புதுவை, சென்னைப் பல்கலைக்கழகங்கள் நூற்றாண்டுக் கருத்தரங்கை நடத்தின. நூற்றாண்டை ஒட்டிப் புதுவைச்சிவம் நினைவாக அருங்காட்சியகமும், வளைவுத் தூணும் அமைக்கப்படும் என்று புதுச்சேரி அரசு அறிவித்துள்ளது.

தன்னையும், தன் சுற்றத்தையும்விடத் தன் நாட்டையும் தமிழையும் அதிகமாக நேசித்தவர் கவிஞர் புதுவைச்சிவம். 'தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை' என்ற பாவேந்தரின் கவிதை வரிகளைச் சாகாவரம் பெற்ற சொற்றொடராக ஆக்கியதிலும் புதுவைச் சிவத்திற்குப் பங்குண்டு. ■

# விதியே விடு

சந்தக் கலிவிருத்தம்
(தனதானன தனதானன தனதானன தனனா)

இறைவாசலை விலகாதுள இளமாதுளை மலரே
சிறைவாசலை விலகாதுபொ(ன்) திருநீங்குத லேனோ?...
பிறையோவிய நுதலாளுள(ம்) பிரியாவலி ஏற்றல்
முறையேயிலை இவையேனதை மொழிவாயிள மானே...

அலைமீதொரு படகாடிட அதைநோக்கிடு மனையாய்
மலைமோலொரு மயிலாடிட மனமேற்றிடு தொழிலாய்த்
தலையேறிய நரையேற்றுட(ன்) தடியூன்றிடு முறவாய்க்
கலைவாணியி(ன்) தாத்தாவரு கதைகேட்டிடு விதியே...

விரிதாமரை முகனாயிரு விழியோ?..யிள மதியாய்
அரிமாவுரு புறமேந்திட அகமோ?...விட மொழுகும்
நரியேயென நலிவேதரு நமனேயென அறிய
அரிதாகிடு மெழிலோடவ னழிவேதர வந்தான்...

தவமேதரு வரமோ?...யிலை தணலோ?...இவ னென்றே
சிவனாலய மங்கேயெரி திரியாயுள முருக
அவனேபதி எனவந்தது மன்பாலெனை வென்றான்
அவனேசில தினமோடிட அம்பாயெனு(ள்) நின்றான்...

பதியேயொரு விசமேதினி பனிமேனியை விற்றான்
நதியோடிலை எனவாழ்வது நரகாகிட நகர
அதிலேவரு மனவேதனை அணையாதெனு ளெரியும்
விதியேவிடு வலியோடுள விலைமாதுட லனலே...

பகலோ?...கடு மிருளாயெழு(ம்) பலியாக்கிட ஆண்கள்
நகமோ?...புலி என்றேதொட நகையோ?...இத ழகலும்
துகிலோ?...உட லொன்றாநொடி துயராலுயி ரெரியும்
அகலூற்றிய நெய்யாகிடு மதையேதின மேற்றேன்...

மணமேடையி லொருநாளவ(ன்) மறுமாதொடு கண்டேன்
பிணமேடையை ஈந்தேனத(ன்) பின்னேசிறை வந்தேன்
அணலேறிய மணநூலினை அன்றேயன லெறிய
அணலேறிட இங்கேவரு மதுபோலொரு கயிறே...

புதிதாயொரு வழியேயிலை புவியேயெனை இனிமேல்
பதியோடிலை பலபோரொடு முறவாடிட அலையும்
சதியேயிவ ளெதிரேவரு சனியேயென ஏசும்
உதிராமல ருளதோ?...விலை உயிரே?...யினி வேண்டா...

– இதயம் விஜய்



# ஓட்டு




- எஸ். உதய பாலா

கர்ணன் கனத்த மனதுடன் தன் வீட்டுக் கூரையின் ஓட்டை வழியே சிதைந்த நிலவைப் பார்த்தவாறு கண்ணீரில் கரைந்துகொண்டிருந்தான். "ஊனம் இல்லாம பொறந்திருந்தா நம் அம்மாவ எப்படியாச்சும் காப்பாத்திருக்கலாம்., அந்த பாலாப்போன இறைவன் நம்மல நொண்டியாக்கிட்டானே" என வாய்விட்டு அழுதுகொண்டிருந்தான்.

தூரமாய் வரும் காரின் வெளிச்சம் கூரையின் வாசல் வழியாகவுள்ளே வந்து கர்ணனின் வெறியால் உடைந்து சிதறிய கருப்பணசாமியின்பு கைப்படத்தில் பட்டு குடிசை முழுக்க மின்னலாகப் பரவிய வெளிச்சத்தோடு வார்டு கவுன்சிலர் மாரி உள்ளே வந்தார்.

"டேய் கர்ணா, இப்படியே படுத்திருந்து எதுக்காகுது? எல்லாம் ஒரு நாளைக்கி போய்த்தான் ஆகணும். நம்ம எமெல்யே வந்துருக்காரு உனப்பாக்கத்தான் எந்திரிடா..." இரண்டு நாளா சாப்பிடாம இருந்த கர்ணன், வலுக்கட்டாயமாக தனது ஒற்றைக்காலை அழுத்திப்பிடித்து அமர்ந்தான். அழுது சோர்ந்த கண்களும், துவண்டுபோன உடலையும் பார்த்த கவுன்சிலர் மாரிக்கே கண்ணில் நீர் சொட்ட, அடுத்த வார்த்தைக்குத் தடங்கல்தான் ஏற்பட்டது.

வெள்ளை வேட்டி சட்டைகளுடன் இடையே எமெல்யே நம்பி பக்கத்து வீட்டுக்காரர்களுக்கெல்லாம் வணக்கம் வச்சவாறே குடிசையின் வெளியே போட்ட சேரில் வந்து உக்காந்தான். பிறகு "தம்பி, அம்மா இறந்தத கேள்விப்பட்டேன். ரொம்ப நல்லவங்க, உனக்கு சைக்கிள் வாங்கறதுக்காக என்கிட்ட ஒருதடவை பேசிருந்ததா நினைக்கிறேன், நம்ம கவர்மெண்ட்ட பத்தித்தான் தெரியும்ல ஒனக்கு, உடனே எதும் கிடைக்காதுனு, அதான் இப்போ என் சொந்த செலவுலையே உனக்காக ஒரு சைக்கிள் வாங்கி வந்திருக்கிறேன் வச்சுக்கோ" என்று கூறினான். அவருன் வந்த வெண்மைப் படையில் தனியா ஒரு சப்தம் "ஒரு ஓட்டுக்கு இதே அதிகம் ணா " என்ற. உடனே "டேய்..." என்றவாறு அதட்டிவிட்டு பிறகு தனது உதவியாளரிடமிருந்து ஒரு பணக் கவரையும் கொடுத்துவிட்டு நகர்ந்தான் எமெல்யே நம்பி.

எமெல்யேவுடன் வந்த வெண்மைப் படையுடன் வருங்கால அமைச்சர் அண்ணன் நம்பி..! அண்ணன் வாழ்க..! கோசத்துடன் கவுன்சிலர் மாரியும் ''வரேன் கர்ணா... உடம்ப பாத்துக்கோ, வர்ர எலெக்சன் அண்ணன் நம்பிக்குத்தான் ஓட்டு, மறந்திடாதடா'' என்ற கரகரத்த குரலோடு விடைபெற்றான்.

''நமக்கு உதவியாயிருக்குமேனு இந்த சைக்கிள கவர்மெண்ட்ல வாங்க அம்மா என்ன பாடுபட்டாங்க, இதுவாங்க அலைஞ்சதுலதான் ஆக்சிடன்ட் ஆகி இறந்து போனாங்க, அம்மா எம்மெல்யேட்ட கடிதம் கொடுத்தும் கண்டுக்கலேனு புலம்புனாங்க, இப்போ வரப்போற எலக்சனுக்காக பிச்சை போட்டுப் போறானுக! ஓட்டும் இல்லைனா நம்மல மாதிரி ஏழைகளை, அதும் உடலால் முடியாதவர்களை இந்த ஆளும் வர்க்கமெல்லாம் என் னைக்கோ கொண்டிருப்பானுக'' என நினைத்துக் கொண்டே பணக் கடிதத்தை கிழித்து விளக்கு வெளிச்சத்தில் இரைத்துவிட்டான் கர்ணன். அப்படியே பசியில் "அம்மா" என்ற கதறலுடன் அவன் சப்தமும் அடங்கிப்போனது. அந்த ஒற்றைக் குடைசைக்குள்ளாரவே... ■

# பெத்த உசிரு

- வீரவயல் வீ. உதயகுமாரன்

திருச்சி விமான நிலையம் வழக்கமான பரபரப்பில் இருந்தது. லண்டனிலிருந்து வந்திறங்கிய ஏர் இந்தியா விமானத்திலிருந்து பெட்டிகள், பார்சல்களுடன் பயணிகள் வெளியே வந்து கொண்டிருந்தார்கள் நெடுநாட்களுக்கு பிறகு தங்கள் உறவுகளை கண்ணீருடன் சந்திக்கும் காட்சி நெகிடிநச்சியுடன்அரங்கேறிக் கொண்டிருந்தது. அவர்களைப் போலவே லண்டனிலிருந்து மருத்துவப்படிப்பை முடித்து வரும் தங்கள் மகன் விக்னேஸ்வரனுக்காக தனசேகரனும், மீனாட்சியும் காத்திருந்தார்கள்.

“என்னங்க நம்ம பையனை இன்னும் காணும்” மீனாட்சியின் முகத்தில் ஏக்கம் படர்ந்திருந்தது.

“இந்த பிளைட்டில வர்றதாதானே போன் பண்ணியிருந்தான்” தனசேகரன் சொன்னதும்,

“அம்மா நான் பக்கத்திலதான் நிக்கிறேன் என்னை அடையாளம் தெரியலியா”

சிரித்தபடி ஆஜரானான் விக்னேஸ்வரன். “கண்ணு கலங்கிட்டே இருந்ததால நீ வர்றதை பாக்க முடியல” கண்ணீரை முந்தானையால் ஒத்தி எடுத்த மீனாட்சிக்கு மீண்டும் கண்கள் கலங்கியது.

“என்னடா இப்படி அனியாயத்துக்கு எளைச்சி போயிட்டே” அம்மா சொல்வது உண்மைதான் படிக்கும் காலத்தில் ‘பம்ப்ளிமாஸ்’ என்று கேலி செய்யும் அளவுக்கு உடல் இருந்தது. இப்போது ஒட்டடைக்குச்சி போல இருக்கும் இவனைப் பார்க்கும்போது பெற்ற மனம் துடிக்கத் தானே செய்யும். இந்த தாடீநுப்பாசத்துக்கு இணையா உலகத்துல வேறு எதுவும் இல்லை. உருகிப் போனான் விக்னேஸ்வரன்.

“நீ செஞ்சி போட்ட சாப்பாடு மாதிரி அங்கே கிடைக்கலியேம்மா... ஏதோ படிப்பை முடிக்கிறதுக்காக பல்லை கடிச்சிட்டு ஒட்டிட்டு வந்திருக்கேன்.”

தமிழ்நாட்டு சமையல் சுவையை இழந்துவிட்டு வந்த விக்னேஸ்வரனின் பரிதாபத்தை மீனாட்சியால் உணரமுடிந்தது.

நீண்ட நாட்களுக்கு பிறகு அம்மாவின் சாப்பாட்டை ரசித்து ருசித்து சாப்பிட்ட விக்னேஸ்வரன் அம்மாவை பாசத்தோடு பார்த்தான். ஆனந்தக் கண்ணீரில் மீனாட்சி மங்கலாக தெரிந்தாள்.

மீனாட்சி தயங்கியபடி தொடங்கினாள்.

“விக்கி உனக்கு விஷயம் தெரியுமாடா உன் மாமா பொண்ணு வித்யாவுக்கு பேங்க்ல வேலை கிடைச்சிருக்கு உன் மாமா அடிக்கடி ஞாபகப்படுத்திட்டே இருக்கார்.”

விக்னேஸ்வரனுக்கு புரையேறியது. மீனாட்சி தலையில் தட்டினான். அவசரமாக தண்ணீரை குடித்து விட்டு தொடர்ந்

தான் விக்னேஸ்வரன் .

''அம்மா நீ அடுத்து என்ன சொல்லப் போறேன்னு எனக்குத்தெரியும். ஒரு நாலு வருஷத்துக்கு எனக்கு கல்யாணம் பண்ற ஐடியாவே இல்லை.''

''என்னடா சொல்ற'' அதிர்ச்சியுடன் கேட்டாள் மீனாட்சி.

''சிங்கப்பூர்ல பிரபரலமான அந்த ஆஸ்பிட்டல்ல பணிபுரிய வாய்ப்பு கிடைச்சிருக்கு நம்ம சூப்பர் ஸ்டார் கூட டிரீட்மெண்டுக்காக அங்கதான் வரு வாராம் இன்னும் ஒரு வாரத்தில நான்சிங்கப்பூர் போறேம்மா.''

“என்னடாஇப்படிசொல்லிட்டஅப்பாவுக்கு தெரிஞ்சா மனசு உடஞ்சு போயிடுவார் அவர் என்ன சொல்லிட்டு இருக்கார் தெரியுமா நம்ம ஏரியாவுலயே ஒரு கிளினிக் கட்டி ஏழைகளுக்கு குறைந்த செலவுல வைத்தியம் பாக்கணும்னு சொல்லிட்டு இருக்கார். குறிப்பாக பாய்சன் சாப்புட்டவர்களையும், பாம்பு கடிச்ச வங்களையும் காப்பாத்த ஒரு ஐம்பது கிலோ மீட்டர் தூரத்துக்கு போகவேண்டியிருக்கு.”

''அம்மா இங்கே அஞ்சுக்கும் பத்துக்கும் வைத்தியம் பாக்கவா நான் லண்டனுக்கு படிக்க போனேன். நம்ம ஊரைவிட அங்க பலமடங்கு சம்பளம் என் முடிவுலயிருந்து பின் வாங்கமாட்டேன்னு அப்பாகிட்ட சொல்லிவைம்மா.'' அழுத்தமாக தன் முடிவைச் சொல்லிவிட்டு உறங்கப் போனான் விக்னேஸ்வரன். அவனுக்கு உறக்கமே வரவில்லை. கண்களை மூடும் போதெல்லாம் ஜூலி சிரித்தபடி டாட்டா காட்டிக் கொண்டிருந்தாள்.

சிங்கப்பூர் விமான நிலையத்தில் விக்னேஸ்வரனை சிரித்த முகத்துடன் வரவேற்றாள் ஜூலி. ஜூலி சிங்கப்பூர் குடியுரிமையை பெற்ற பெற்றோருடன் வாழ்பவள். லண்டனில்மருத்துவம் படிக்கும் போது விக்னேஸ்வரனை மிகவும் பிடித்து



போனது ஜூலிக்கு இப்போது சிங்கப்பூரில் மருத்துவப்பணிபுரியும் வாய்ப்பு அவள் மூலம் தான் அவனுக்கு கிடைத்திருக்கிறது.

''என்ன விக்கி பேசவே மாட்டேங்குற'' ஆங்கிலத்தில் வினவினாள் ஜூலி.

“மனசே சரியில்லை ஜூலி எங்க ஊரைவிட்டும் அப்பா அம்மாவை விட்டும் வர எனக்கு கொஞ்சம்கூட பிடிக்கல நான் சிங்கப்பூர்வந்ததேஉனக்காகத்தான்”உடைந்த குரலில் சொன்னான் விக்னேஸ்வரன். நீண்ட நாட்களுக்கு பிறகு தந்தையிடம் இருந்து போன் வந்ததைக்கண்டு வருத்தம்கலந்த மகிழ்ச்சி ஏற்பட்டது விக்னேஸ்வரனுக்கு.

‘சே என்ன மனுசன் நான் அப்பா அம்மாவுக்கு போன் பண்ணக்கூட நேரம் இல்லாம டியூட்டியில ஐக்கிய மாயிட்டேன்.’

“விக்னேஸ்” என்று அழைத்த தனசேகரன் மேலும் பேசமுடியாமல் தயங்கிக் கொண்டிருந்தார்.

“அப்பா நான் விக்னேஸ்வரன் பேசுறேன் இன்றைக்கு காலையில பக்கத்தூர் எஸ்டேட்ல வேலைபாத்த பொண்ணுக்கு ஒரு விஷப்பாம்புகடிச்சிருச்சிகாப்பாத்திட்டேம்பா ஆஸ்பிட்டல்லஎனக்கு ஒரே பாராட்டு மழை சரிப்பா அம்மா எப்படியிருக்காங்க.”

மகனின் கேள்விக்கு தனசேகரனால் உடனே பதில் சொல்ல முடியவில்லை. சில நிமிடங்கள் மௌனத்திற்கு பிறகு தொடர்ந்தார்.

“அம்மாவைப்பத்தி சொல்றதுக்குதான் போன்பண்ணினேன்.அம்மாநம்மளவிட்டுட்டு போயிட்டாடா” அப்பாவின் அழுகை மட்டுமே தொடர்ந்து கேட்டது விக்னேஸ்வரனுக்கு மின்சாரம் தாக்கியது போல் இருந்தது.

“அடக்கடவுளே அம்மாவுக்கு என்னப்பா ஆச்சு...''

“தோட்டத்துக்கு போனப்போ அம்மாவை பாம்பு கடிச்சிடுச்சுடா பக்கத்துல விஷத்துக்கு வைத்தியம் பண்ற வசதியில்லை. பட்டுக் கோட்டைக்கு கொண்டு போகும் போது பாதி வழியிலேயே உயிர்போயிருச்சுடா அம்மாவோட இறுதிச் சடங்குலயாவது உன்னால கலந்துக்க முடியுமா?”

''அப்பா அடுத்த பிளைட்டில உடனே ஊருக்கு வர்றேம்பா எனக்காக எல்லோரும் வெயிட் பண்ணுங்கப்பா''

உற்றார் உறவினர்களின் முகத்தை பார்க்கவே விக்னேஸ்வரனுக்கு வெட்கமாக இருந்தது. செந்நிறமாக இருக்கும் அம்மா நீலம் பூத்துக் கிடந்தாள் தனசேகரன் தலையில் அடித்துக்கொண்டு அழுதார்.

“சாகுபடி நிலத்தை எல்லாம் வித்துட்டு லண்டன்ல படிக்கவச்சேன்.எதுக்குதெரியுமா நல்ல ஆஸ்பத்திரி இல்லாத இந்த ஏரியாவுல நிறைய உசுருகள காப்பாத்தலாம்கிற ஒரு நம்பிக்கையிலதான் கடைசியில் பெத்த உசிரைக்கூட காப்பாத்த முடியாம போச்சேடா கோடி கோடியா சம்பாதிச்சாலும் உன் அம்மாவோட உயிருக்கு ஈடாகுமாடா.”

''அப்பா என்னை மன்னிச்சிடுங்கப்பா படிப்புத்திமிறு என் மனசைக் கெடுத்துடிச்சி இந்தப் பாவத்துக்கு எனக்கு மன்னிப்பே கிடைக்காதுப்பா...''

தந்தை, மகன் இரவரது துக்கத்தின் வெளிப்பாடு உறவினர்களையும் சேர்ந்து அழவைத்தது மீனாட்சி தீயில் கருகிக் கொண்டிருந்தாள். விக்னேஸ்வரனால் அழுகையை கட்டுப்படுத்தமுடியவில்லை.

''அம்மா என்னை மன்னிச்சுரும்மா'' சத்தம் போட்டு அழுதான் விக்னேஸ்வரன். இடுப்பில் இருந்த பாஸ்போர்ட்டை எடுத்து எரிந்து கொண்டிருக்கும் தாயின் சிதையில் வீசினான் விக்னேஸ்வரன்.

பாஸ்போர்ட்டுடன் அவனது வெளி நாட்டு மோகமும், காதலும் சேர்ந்து கருகிக் கொண்டிருந்தது. ■

# என் விளக்கில் உன் இருள்



முச்சங்கம் வைத்துத் மொழி வளர்த்த மதுரை மண்ணில் உதித்துத் தொன்மைத் தமிழ் மொழியின் மேன்மையை நாளும் பொழுதும் மூச்செனக் கொண்டு வாழும் தேர்ந்த ஆய்வறிஞர், பல கல்லூரிகளில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர் நவீன ஔவையார் பேராசிரியை நா.நளினிதேவி அம்மா அவர்களின் அகத்தில் தோன்றிய நுண்ணிய உணர்வுகளை

"என் விளக்கில் உன் இருள்"

என்றுமானுடசமுதாயத்தில்பலபடிமங்களாகப் படிந்திருக்கும் இருளை அகற்றும் வெளிச்சக் கீற்றுகளைக் கவிதைகளாகப் பரவ விட்டுள்ளார். இந்த இருள் யாருடையது என்பதற்கான புரிதலுடன் வாசித்தால் ஆழப் பொதிந்திருக்கும் அர்த்தங்கள் ஆயிரம்.

"நான் போராடுவது  
எரிக்கும் திரியிடமிருந்தா?  
வீழ்த்தும் இருளிடமிருந்தா?..."

என்று தொடங்குகிறார்... வாசித்ததும் கணக்கற்ற கேள்விகள் நமக்குள்ளும் கண்ணாமூச்சி ஆடத் தொடங்குகின்றன..மேம் போக்காகப் பார்க்கும் பொழுது எளிமையாகத் தோன்றினாலும் சமுதாயத்தில் வேரோடியுள்ள சீர்கேடுகளுடன் ஒப்பிட்டு நோக்க பல திசைகளிலும் விரிகிற நம் மனவோட்டம்

"எத்தனை முறை  
ஏற்றினாலும்  
என் விளக்கில் உன் இருள்"...

என்ற இறுதிவரியில் இந்த இருள் விலக இன்னும் எத்தனைக் காலமாகுமோ என்ற எண்ணம் ஏக்கமாக மாறுவதையும்.. எப்படியாவது சீர்செய்ய வேண்டுமென்ற வேகம் தோன்றுவதையும் தடுக்கவியலாது.

சொல்ல எண்ணியதைச் சுருக்கமாகத் தெளிவுடன் சொல்லிவிடுகிற நுணுக்கம் அழகு.

"ஒரே செடியில்  
மலர்களும்  
சருகுகளும்"...

என்று வாழ்வியலின் நிதர்சனத்தை எடுத்துரைக்கும் அதே வேளையில்

"இந்தச் சருகில்  
எந்தச் சருகு  
என் சருகு?" ...

என வினவுவது சட்டெனப் பரவிடும் ஒளிச் சிதறல்.

கவிஞரின் அறச்சீற்றம் கலந்த எள்ளல் எப்படி வெளிப்படுகிறது பாருங்கள்..

"நின்று கொல்ல  
அறத்திற்கும்  
வேறு முகம்  
தேவைப் படுகிறது"...என்றும்

"கீதையின் மறுபக்க இருளில்  
மனிதத்தின் மாண்பொளி  
புதைந்து கிடக்கிறது விதவிதமாய்" ..

என்பதுமாய் மின்னல் வெளிச்சமாக பளீரிடுகின்றது அல்லவா?

பெண்ணினத்தின் மாண்பைப் போற்றும் கவிஞர் இருபாலருக்கும் உயர்வு தாழ்வற்ற பொதுநிலை வேண்டுமென்பதில் என்றும் சமரசம் கொண்டதில்லை.

''பெண்ணுக்கு இல்லை
சமநிலை எனில்
அது மண்ணுக்கும் இல்லை'' என்றும்

''பெண் எனும் பெருஞ்செல்வமே...
வளர வளர வஞ்சனை பலவும் அறிவாய்!
எல்லாம் தகர்ப்பாய்!எதையும் கடப்பாய்!
ஆளுமை ஆளும் நாளைய நம்பிக்கை நீ!''

என்றும் பெண்ணியத் தணலின் வெளிச்சப் பிழம்பாக விரிவதுடன்

''நீ உன்னைப் புரிந்து கொள்
பின் என்னைத் தெளிவு செய்''

''நானும் ஓர் அலகு
நீயும் ஓர் அலகு
அதுவே நம்
இல்லறத்தின் பேரழகு!''

என்பதாகவும் சமநோக்குடைய இல்லறமே என்றென்றும் நல்லறமாகுமென அகலின் சுடராக வெளிச்சமிடுகிறார்.

நாட்டையும் நம்மையும்

''மனத்தொட்டிகள்
குப்பைத் தொட்டிகளாகி
நிரம்பி வழிகின்றன
குப்பை மனிதர்களால்''

என்ற சாடலுடன் உள்ள நிலையை உள்ளவாறு எடுத்துக் கூறித் திருந்துமாறு எச்சரிப்பது நிமிர்வின் வெளிச்சம்.

நூல் முழுவதும் தெளிந்த நோக்கோடு பெண்ணிய, பெரியாரிய, சமுதாயச் சிந்தனை மிகுக்கவிதைகளுடன்காதலும்அழகியலுமாக




பல்வேறு பாடுபொருட்கள் சிறுசிறுத் தெறிப்பு களாக விரவி இருக்கின்றன.

''எழுதுகிறேன்
அதனால்தான் இருக்கின்றேன்:
இருக்கின்றேன்:
அதனால்தான் எழுதுகின்றேன்.''

என்று பழமையும் புதுமையுமாய் மனித நேயமும்நேசமுமாய்,எள்ளலும்சாடலுமாய், வீரமும் விவேகமுமாய், நுணுக்கமான பல வினாக்களை கேட்டுள்ளார் கவிஞர்.

விடையறிந்தோமானால் அவை காலத் திற்கும் வழிகாட்டும் கலங்கரை விளக்குகளாக மானுடத்தினை நல்வழிப்படுத்தும் வல்லமை மிகுக் கவிதைகளாகும். பல்வேறு வகையான வெளிச்சக்கீற்றுகளைப் பரப்பி இருளகற்றும் பணியினை மேன்மேலும் தொடரும் அம்மா நா.நளினிதேவி அவர்களை மனதால் வணங்குகிறேன்.

நூல் மதிப்புரை :

அன்புச்செல்வி சுப்புராஜூ

வெளியீடு :
ஓவியா பதிப்பகம், வத்தலக்குண்டு
பக்கங்கள் : 112 விலை : ₹100

# வட்டித்தருதல் முற்றும் ஒழி

## வல்லிசை வண்ண எண்சீர் விருத்தம்



ஒட்டுத்துணி கட்டித்தெரு நிற்கச்செயு தற்கே
ஒட்டுப்பசை கெட்டித்தன வட்டிக்கடை வைத்தே
குட்டக்குனி தற்குத்தக வக்கற்றது கட்கே
குட்டித்தரு தற்குத்தக வட்டிப்பெறு தற்கே
கட்டுப்பண வித்துக்களை இட்டப்படி நட்டே
கொட்டுப்பண முத்துக்களை கட்டித்தழு வற்கே
சட்டப்படி சட்டத்தினை சட்டைப்பையி லிட்டே
சிட்டைப்படி வெற்றிப்பெரு மற்பத்தன முற்றே!

- மெய்யன் நடராஜ்



மாணவர் பொதுநலத் தொண்டியக்கத்தின் 129 ஆம் நிகழ்வில் உலகத் தாய்மொழி நாளை முன்னிட்டு சீனாவின் யுனான் மின்சு பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் தமிழ் ஆசிரியர் நிறைமதி அவர்கள், தமிழின் சிறப்புகள், தமிழர்கள் தாய்மொழி வழிக்கல்வியில் பயில வேண்டும், ஆங்கிலக் கலப்பின்றி உரையாட வேண்டும் என்பனவற்றை முன்வைத்து ‘செஞ்சீனமும் செந்தமிழும்’ என்ற தலைப்பில் உரையாற்றினார்

# இசை

யௌவனமானதொரு
மெல்லிசையை
போர்த்திக்கொண்டு
துயிலச் செல்கிறேன்..

பக்குவமாய் என் மேல்
படர்ந்திருந்த
கவலையின்
அடுக்குகளை கலைத்தே
ஊடுருவியது அது...

இதுவரை தரப்படாத
புத்துணர்வின்
அரவனைப்பை
கிரகித்துக்கொண்டது
மனதின் மேனி....

புரளுகையில்
அங்கங்கே விலகும்
எண்ணங்களை
உயிர் சரிசெய்து
கொள்ள

அடைப்பட
தேவையற்று போனது
காற்றெனும் நினைவுகள்

ரசனைக்குள்ளாகி
மேலும் மேலுமென
போர்வையின்
இதம் பிடித்து
முகம் வரை
முக்காடிட்டுக் ரொள்கிறேன்...

எத்தனை இறுக்கியும்
இதுவரை
மூச்சு முட்டுவதாயில்லை
என் உறக்கத்திற்கு...

**– மகா**

இன்னிசைச் சிந்தியல் வெண்பா

## அன்பு

அன்னை கொடுத்த அமுதத் தமிழுண்டேன்!
அன்புதனை அள்ளி அகமணிந்தேன்! என்றென்றும்
அன்னையருள் காக்கும் அணை

## நினைவுகள்

காற்று நிகழ்த்திய கார்காலக் காட்சிகள்
காற்று வடித்த கசிந்த கனவுகள்
காற்றுடன் நானிருந்த போது

- தமிழ்நெஞ்சம் அமின்

## அமைதியான நதியினிலே ஓடும் ஓடம்

அமைதியான நதியினிலே ஓடும் ஓடம்
அழகு நிறைந்த வாழ்வினிலே ஆடும்
ஆசைகள் அதிகரிக்க ஆனந்தமும் குறையுமே
அலைகள் போன்று மனமும் தவிக்கும்

வாழ்க்கை என்னும் படகினில் பற்பல
வாசல்கள் நாளும் திறந்து இருக்கும்
வழியில் வந்திடும் தடைகளைத் தாண்டி
வாட்ட மின்றிச் செல்வது கடினம்

எதிர்பார்ப்பு இன்றி வாழ்ந்து வந்தால்
எதிலும் வெற்றி விரைந்து வருமே
கதிகலங்கி நின்று புலம்பி யழுதால்
காசினியில் நிம்மதியும் வருமா

இடர்கள் எங்கும் முன்னே நிற்கும்
எதிர்த்துப் போராடி வெற்றி கொண்டால்
சுடரும் தீபம் போன்று வாழ்வு ஒளிரும்
தொல்லை யகன்று வாழ்வும் சிறக்கும்

இன்ப துன்பம் மாறிமாறி வந்திடும்
எதையும் தாங்கிடும் இதயம் இருந்தால்
என்றும் வெற்றி உனக்கே கிட்டுமே

**நிர்மலா சிவராசசிங்கம்**



# “ கர்நாடக இசை கலை எல்லோரிடமும் சென்றடைய வேண்டும் ”

## விடா முயற்சிக்கு
### மனந்திற
### இசைக் கலைஞர் வி

**உலகம் முழுவதும்.. மகளிர் தின கொண்டாட்டங்கள் இம்மாதத்தில் வெகுசிறப்பாகநடந்துக்கொண்டிருக்கும் வேளையில்.. இசைத் துறையில்.. பெண்களின் முன்னேற்றத்திற்காக தமது வாழ்நாளின் பெரும் பகுதியை செலவிடும் ஓர் அரிய தொழிலதிபரும்.. 2018 ற்கான கலைமாமணி விருது பெறும் இளம் இசைக் கலைஞருமான திருமதி வித்யா சுப்ரமணியன் அவர்களை பிரான்சு தமிழ்நெஞ்சம் இதழின் வாயிலாக சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்..**

வாருங்கள் நேர்காணலுக்கு போகலாம்..

**உங்களுடைய இளமைக்காலம் எப்படி கழிந்தது?**

என்னுடைய குடும்பம் அடிப்படையில் இசையை விரும்பும் குடும்பம். என் பெற்றோர் இருவரும் பட்டய கணக்காளர்கள் (Charterd Accountants). நான் பிறந்தது, வளர்ந்தது எல்லாமே சென்னையில் தான். குடும்பத்தில் யாரும் இசைக்கலைஞர்கள் கிடையாது. ஆனால் எல்லாரும் இசையை விரும்புபவர்கள். இசையை விரும்பும் குடும்பம். நிறைய கச்சேரிகளுக்குச் சென்று பாடல்கள் கேட்போம். இசையை பற்றி நிறைய விவாதங்கள் செய்வோம். இப்படி தான் என்னுடைய இளமைக்காலம் கழிந்தது.

இசை மீது ஆர்வம் எப்படி வந்தது?

எங்க குடும்பத்தில், எங்க அம்மா, பாட்டி எல்லாருமே பாட்டு பாடுவாங்க. ஆனால் யாருமே மேடை ஏறி கச்சேரி செய்ததில்லை. ஆனால் இசையில் நிறைய ஆர்வம் உண்டு. அதனால் எனக்கும் நிறைய கேள்விஞானம் இருந்தது. திருமதி.ருக்மணி ராஜகோபாலன் அவர்கள் ஒரு மூத்த இசை ஆசிரியை. அவர்கள் என் பாட்டியின் நெருங்கிய தோழி. எனக்கு மூன்று வயது இருக்கும் போது என் பாட்டி அவர்களிடம் என்னைப் பாட்டு கற்கச் சேர்த்தார்கள். மூன்று வயது முதல் பத்து ஆண்டுகள் அவர்களிடம் இசை கற்றேன். நிறைய கீர்த்தனைகள், சங்கீதம் தொடர்பான பயிற்சிகளை அவர்கள் எனக்குக் கற்றுக் கொடுத்தார்கள். இப்படித்தான் எனக்கு இசை மீது ஆர்வம் ஏற்பட்டது.

உங்கள் குரு. அவர் உங்கள் வாழ்க்கை





## சந்திப்பு : சாரதா சந்தோஷ்

யில் ஏற்படுத்திய தாக்கம்.

எனக்கு சுமாராக பன்னிரண்டு வயது இருக்கும் போது எனது குரு பத்மபூஷன் திரு.லால்குடி ஜெயராமன் ஐயா அவர்களை முதன்முதலில் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அவரிடம் நான்கு மாதகால அளவில் ஒரு சிறப்புப்பயிற்சி செய்யத் தேர்ந்தெடுக்கப்பட்டுத் தேர்வு பெற்றேன். அது எனக்கு நிஜமாகவே ஒரு மைல்கல்லாக இருந்தது.

சங்கீதத்தில் இவ்வளவு விஷயங்கள் இருக்கிறதா? என்ற வியப்பு எனக்குள் ஏற்பட்டது.

எனக்கு பதிமூன்று வயது இருக்கும்போது அவரிடம் நான் மாணவியாக சேர்ந்தேன். நான் அப்போது எட்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். அவர் எங்களுக்கு எவ்வளவோ விஷயங்களைக் கற்று கொடுத்திருக்கிறார். ஒரு கச்சேரியை எப்படிப் பிரகாசிக்கச் செய்வது அதில் என்னென்ன நெளிவு சுளிவுகள், சிறப்பு அம்சங்கள் இருக்கின்றது என்பதனை போதித்து, அதற்கு மேலும் நிறைய கீர்த்தனைகள், தில்லானாக்கள், வர்ணங்கள், அவருடைய சொந்த கீர்த்தனைகள், எல்லாவற்றையும் தன் சொந்தக்குழந்தைக்குக் கற்றுக்கொடுப்பது போல எனக்கும் கற்று கொடுத்ததை நான் செய்த பாக்கியமாகக் கருதுகிறேன். நமது கர்நாடக இசையில் இந்த மனோதர்ம சங்கீதம் என்பது மிகவும் முக்கியமானது. ஆலாபனைகள், கல்பனாசுவரங்கள், ராகம், தாளம், பல்லவி எப்படிப் பாடவேண்டும் இந்தமாதிரி நிறைய விஷயங்களை எளிதில் புரிந்துகொள்ளும்படி கற்றுக் கொடுத்துள்ளார். சங்கீதத்தைத் தவிர அவரிடம் வாழ்க்கைக்குத் தேவையான நெறிமுறைகள்,முற்றிலும்அர்ப்பணிப்பு,மற்றும் இசை பற்றிய பாடங்களை புரிந்துகொள்ளும் வகையில், தெளிவான முறையில் விளக்குவார். தெளிவான குறிப்புகள், அதற்கான படிப்படியான விளக்கங்களைத் தருவார். அதிலிருந்து நான் நிறைய விஷயங்களை, என்னுடைய கற்பித்தல் முறைகளுக்கு பயன்படுத்திக் கொண்டு இணையதளத்தில் இசையைக் கற்றுத்தர முயற்சி செய்துள்ளேன். இதனால் அவர் நேருக்கு நேர் கற்றுக் கொடுத்த நிறைய வழிமுறைகளை என்னால் இணைய தளத்தில் மாணவர்களுக்கு கற்றுக்கொடுக்க முடிகிறது. அவரிடம் மாணவியாக இருந்தது என் வாழ்க்கையின் மிகப் பெரிய பாக்கியமாக நான் கருதுகிறேன்.

# த கிடைத்த பரிசு

## க்கிறார்

## த்யா சுப்ரமணியன்



சென்னை டச்சஸ் சங்கத்தில்.. இசை சொற்பொழிவாற்றும் பொழுது..

**தமிழ் இலக்கியங்கள், தமிழிசை மீதுள்ளஈடுபாடுபற்றிச்சொல்லுங்கள்?**

தமிழ்ப் பாடல்களில் எனக்கு ஈடுபாடு அதிகம் உண்டு. பாரதியார் பக்தி மற்றும் தேசபக்திப் பாடல்களில் உயர்ந்த சிந்தனைகளை எளிய வார்த்தைகள் மூலம் விழிப்புணர்வு ஊட்டும் வகையில் எழுதியுள்ளார். நம்முடைய கலாசாரத்தை ஆழ்வார்களின் பாசுரங்கள் மற்றும் நாயன்மார்களின் தேவாரப் பதிகங்களைப் பாடி அறிந்து கொள்ளலாம். அவற்றின் மூலம் நம்முடைய இறை வழிபாட்டையும் கற்றுக் கொள்ளலாம். தமிழ் மொழியில் கர்நாடக இசையுடன் கூடிய நிறைய பாடல்களை திரு. ஊத்துக்காடு வெங்கட சுப்பையயர் அவர்கள் 400, 500 வருடங்களுக்கு முன் நிறைய கீர்த்தனைகளாகப் பாடியுள்ளார். தாயே யசோதா, ஆடாது அசங்காது வா கண்ணா ஆகியபாடல்கள்அவர்எழுதியமிகச்சிறப்பான பாடல்கள் ஆகும். தமிழ் தியாகைய்யா என்று போற்றப்படும் திரு.பாபநாசம் சிவன் அவர்கள் எளிய தமிழில் எல்லாக் கடவுள்களைப் பற்றியும் கீர்த்தனைகள் பாடியுள்ளார். அருணாசல கவிராயர் இராமாயணத்தையே நாடக வடிவில் இசையுடன் பாடியுள்ளார். கோபாலகிருஷ்ணபாரதி, நந்தனார் சரித்திரம் மற்றும் சிவபக்தி பாடல்களைப் பாடியுள்ளார். கோடீஸ்வரர் ஐயர் 72 மேளகர்த்தா ராகங்களிலும் கீர்த்தனைகள் இசையமைத்துள்ளார். இவர்கள் மேல் எனக்கு நிறைய மதிப்பும், மரியாதையும் உண்டு. அவர்களின் கீர்த்தனைகளை நான் பாடி அதன் மூலம் என் தமிழ் தாகத்தையும், ஆர்வத்தையும் தீர்த்துக் கொள்கிறேன்.

**நீங்களொரு CA. MBA... பட்டதாரி என்பதை அறிவேன்..அதை விடுத்து முழு நேர இசைக் கலைஞராக மாறியது எப்படி?**

நான் என்னுடைய பட்டயக்கணக்கர் (CA)மற்றும் முதுநிலை வணிக நிர்வாகம் (MBA) படிப்புக்குப் பிறகு அமெரிக்காவில்

சென்னை ரோட்டரி சங்கத்தில்.. சிறந்த இசைக்



பெரு நிறுவனத்தில் (corporate sector) பணி புரிந்தேன். அங்கே பலருக்கும் சங்கீதமும் கற்றுக் கொடுத்தேன். அப்போது நான் புரிந்து கொண்டது நம்முடைய கர்நாடக இசை என்பது உலகம் முழுவதும் சென்று சேர வேண்டிய கலை என்று. அதற்கான முயற்சியில் நிறைய பேர் ஈடுபட்டனர் என்றாலும் நானும் கர்நாடக இசையைக் கற்று கொடுப்பதில் எளிய வழிகளைக் கண்டுபிடித்து இணையதளம் மூலமாக இந்த கலை எல்லாரிடமும் சென்றடையவேண்டும் என்று விரும்பினேன்.அதனால் 2004 ஆம் ஆண்டு முதல் இந்த கர்நாடக இசைக் கற்பித்தலை என்னுடைய முழு நேரப்பணியாக செய்யலாம் என்று தீர்மானத்தேன்.

**பல ஆண்டுகள் அமெரிக்காவில் வாழ்ந்து கொண்டிருந்த நிலையில்.. தாயகம் திரும்பியதன் காரணம் ...**

பல ஆண்டுகள் அமெரிக்காவில் வசித்தாலும் எனக்கும் என்னுடைய கணவருக்கும் இந்தியாவிற்கு வந்து நம்முடைய தேசத்தின் முன்னேற்றத்தில் பங்கேற்க வேண்டும் என்ற ஆர்வம் எப்பொழுதுமே உண்டு. நான் இணையதளம் மூலமாக ஒரு கலைக் கழகத்தைப் பன்னிரெண்டு வருடங்களுக்கு முன்பு தொடங்கினேன். இந்தியாவில் நிறைய ஆற்றல் மிக்க கலைஞர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய கலைகள் அத்தனையும் மக்களைச் சென்று சேர வேண்டும். அதற்கு நம்மால் முடிந்த உதவிகளைச் செய்ய வேண்டும் என்ற நோக்கம் இருந்தது. சிறிய ஊர்களில் இருப்பவர்களும் பல கலைகளையும் கற்றுக்கொள்ள வழி வகை செய்ய வேண்டும். அதற்காக பல திறமை மிக்க கலைஞர்களை அடையாளம் கண்டு தேர்வு செய்து அ வர்களுக்கு பயிற்சி அளித்து கலைகளில் ஆர்வம் உடைய அனைவரும் பல கலை களைக் கற்றுத் கொள்ளும்படி செய்ய வேண்டும். இந்த சிறப்பான பணியை இந்தியாவில் இருந்து கொண்டு செ ய்தால் தான் நம் தாய் நாட்டிற்குப் பெருமை என்று தீர்மானம் செய்து 2010 ஆம் இந்தியாவிற்குத் திரும்பினோம்.

**“வித்யாசுப்ரமணியன்கலைக்கழகம்” எவ்வாறுதோன்றியது..அதன்தலையாய நோக்கம். .**

இந்த காலத்தில் ஒரு குடும்பத்தில் கணவன், மனைவி இருவரும் வேலைக்குச் செல்வதால் தங்கள் குழந்தைகளுக்கு கலைகளைக் கற்றுத் தர நேரம் இருப்பதில்லை. ஆதலால் வீட்டில் இருந்தபடியே இனணயதளம் மூலம் கலை வகுப்புகளை நடத்தினால் அது அவர்களுக்கு ஒரு பெரிய வரப்பிரசாதமாக இருக்கும் என்ற உயரிய நோக்கத்துடன் தொடங்கப்பட்டதே “வித்யா சுப்ரமணியன் கலைக்கழகம்” ஆகும். இந்த கலைக்கழகத்தின் நோக்கம் கலையில் ஆர்வம் உடைய எந்த வயதினரையும் அவர்கள் உலகின் எந்த மூலையில் இருந்தாலும் அவர்களை வரவேற்று கலையில் பயிற்சி அளிக்கவேண்டும் என்பதாகும். நல்ல திறமை இருந்தும் செல்வாக்கு இல்லாததாலும், சரியான வழிகாட்டுதல் இல்லாததாலும், பிரபலமாக இல்லாமல்

கலைஞருக்கான விருது பெறும் தருணம்..



இருக்கும் கலைஞர்களை அடையாளம் கண்டு பயிற்சி அளித்து இணையதளத்தின் மூலம் பல கலைகளைக் கற்றுத்தர வாய்ப்புகள் ஏற்படுத்தி தரப்பட்டுள்ளது. எங்கள் கலைக்கழகத்தில் இப்பொழுது வாய்ப்பாட்டுடன் வயலின், வீணை, புல்லாங்குழல், மிருதங்கம், பரதநாட்டியம் ஆகிய வகுப்புகள் மிகவும் சிறப்பான



நியூயார்க்கில்..
க்ளிப்டன் நகர மேயரிடமிருந்து இசைக் கலைஞர் விருது பெறும் பொழுது..

முறையில் நடத்தப்பட்டுகின்றன. சமஸ் கிருத மொழி மற்றும் ஸ்லோகங்களும் கற்றுத்தருகிறோம். தமிழ் மொழி மற்றும் நாலாயிர திவ்யப்பிரபந்தம், திருக்குறள், ஆத்திசூடி, கொன்றை வேந்தன், உலகநீதி, நல்வழி ஆகிய நல்ல அறிவுரைகளைக் கூறும் செய்யுள் வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. இப்போது புதிதாக இந்துஸ்தான் சங்கீதப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

**இசையைப் புதிய கற்கும் முறையாக இணையத்தில் அறிமுகப்படுத்திய போது ஏற்பட்ட நடைமுறை சிக்கல்கள்..**

இசையை இணையதளம் மூலம் கற்றுதரும் போது ஏற்பட்ட முதல் சிக்கல், இது சாத்தியம் ஆகுமா? ஒரு குருவிடம் சென்று நேரில் கற்பது போல் இருக்குமா? போன்ற கேள்விகளுக்கு பதில் அளிப்பதே எனக்கு பெரிய சவாலாக இருந்தது. பெரிய கலைஞர்களும், தங்கள் நேர்காணல் நிகழ்ச்சியில் இது வியாபார நோக்கத்தில் செய்யப்படுவது, இதில் ஆசிரியர்களுக்கு மாணவர்கள் மீது அக்கறை இருக்காது, நேருக்கு நேர் கற்றுக் கொடுப்பது போல் இருக்காது என்றெல்லாம் கூறினார்கள். அப்போது சற்று ஊக்கம் இல்லாமல் இருக்கும். ஆனால் இணையதளத்தில் உள்ள நிறைய தொழில் நுட்பங்கள் மூலம் இசையை நன்றாகவே கற்றுக் கொடுக்கலாம். ஒவ்வொரு வகுப்பையும் Skypeல் பதிவு (record) செய்யலாம். பாடல்களுக்கு முக்கியமான குறிப்புகள் தரலாம். இணையத்தில் நிறைய கச்சேரிகள் கேட்கச் சொல்லியும் அவற்றிலிருந்து வினா - விடை கேட்கலாம். கற்றல் குறைபாடு உள்ளவர்கள், உடல்நலக் குறைபாடு உள்ளவர்கள், சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகள், முதியோர்கள் ஆகியோர் இத்தகைய இணையதள வகுப்புகளால் நிறையவே பயனடைகின்றனர். இம்முறை ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகிய இருவருக்குமே கற்பித்தலுக்கும், கற்றலுக்கும் நல்ல சாதகமான முறையாகவே அமைந்துள்ளது என்பது பலருடைய நேர்மறையான அனுபவ பின்னோட்ட கருத்து ஆகும். (Positive Feedback).

**தங்களிடத்தில் உள்ள எந்த தனித்துவமான திறமை.. கலைமாமணி விருதைப் பெற்றுத் தந்ததாக கருதுகிறீர்கள்**

கடவுளின் அனுக்கிரகம், குரு மற்றும் பெரியோர்களின் ஆசீர்வாதத்தால் எனக்கு இந்த கலைமாமணி விருது கிடைத்துள்ளது. நிறைய கலைஞர்களுக்கு நிறைய திறமைகள் இருக்கின்றன. அவற்றை அடையாளம் கண்டு ஊக்கப்படுத்துவது என்பது மிகவும் அவசியமான செயலாகும். எனக்கு இந்த விருது கிடைத்ததை என்னுடைய பாக்கியமாகக் கருதுகிறேன். அதற்காகத் தமிழக அரசிற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்கள் கழகத்தில் மாணவர்களை நேர்மை உணர்வுடன் வரவேற்று இசையைக் கற்பிப்போம். பெற்றோர்களிடம் கலந்து பேசி மாணவர் நல்ல முறையில் கலைகளைக் கற்க வழிகாட்டுவோம். ஆசிரியர்கள் அனைவரும் கூட்டு முயற்சியோடு பணிபுரிவோம். அனைவரும் கொடுக்கும் கருத்துக்களை நான் வெளிப்படையாக பொறுமையுடன்




நடிகை கவுதமியுடன்..உலக முதலீட்டாளர் சந்திப்பில்.. NIIT மற்றும் FICCI.. அமைப்புகளால் சிறந்த பெண் தொழில் முனைவர் விருது பெறும் பொழுது..




பத்மஸ்ரீ கமலஹாசனுடன்.. "சுயசக்தி விருது" பெறும் பொழுது..

கேட்பேன். இது என்னுடைய நல்ல திறமையாக நான் கருதுகிறேன். எங்கள் கலைக்கழகத்தில் 750 க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பல்வேறு கலைகளை ஆர்வமுடன் கற்கின்றனர். கழகத்தில் ஆறு மாதத்திற்கு ஒரு முறை எங்கள் மாணவர்களைக் காட்சிப்படுத்தி யூ-டியூப் காணொளி சேனலில் வெளியிடுவோம். நான் யூ-டியூப் காணொளி சேனலில் இலவசமாக பல இசை தொடர்பான காணொளிகளையும், பஞ்சரத்ன கீர்த்தனைகளையும், ராகங்களை எப்படி கண்டுபிடிப்பது, அகரம் எப்படி பயிற்சி செய்வது என்பதையெல்லாம் கற்றுத் தருகிறோம்.

நானும், என் நண்பர் தேவேஷ் என்பவரும் சேர்ந்து 80 பகுதிகளுடைய ராக ரசிகா என்ற நிகழ்ச்சியை நடத்தியுள்ளோம். அதில் நாங்கள் சங்கீதம் பற்றி ஒவ்வொரு தலைப்பாக எடுத்துக்கொண்டு உரையாடுவோம். இப்படி முற்றிலுமாக இசைக்கு அர்பணிப்பாக பணிகள் செய்ய எனக்கு துணையாக இருந்த விடாமுயற்சி என்ற திறனுக்கு இந்த விருது கிடைத்ததாக நான் கருதுகிறேன்.

**இதுவரை "வித்யா சுப்ரமணியன் கலைக்கழகம்" புரிந்த சாதனைகள்.**

விளம்பரங்கள் எதுவும் இல்லாமல் எங்களது கலைக்கழகத்தில் மாணவர்களும்,



அமெரிக்காவில்.. டென்னஸ்ஸியில் நடைபெற்ற இசை நிகழ்ச்சியில்..

ஆசிரியர்களும் வந்து சேர்கின்றனர். பெண் கலைஞர்களுக்கு இதில் பணிபுரிதல் என்பது மிகப்பெரிய வாய்ப்பாகும். அவர்கள் வீட்டில் இருந்த கொண்டே தங்களுடைய கலைகளை உலக அளவில் பரப்புகின்றனர். ஸ்ருதி, தாளம் என்றால் என்னவென்று தெரியாமல் வருபவர்களுக்கும் நாங்கள் அவற்றைப் பொறுமையுடன் கற்பிப்போம். பல நாடுகளைச் சேர்ந்தவர்கள், பல மதங்களைச் சேர்ந்தவர்கள், தனி கவனம் தேவைப்படுபவர்கள், வெளி நாட்டினர் என்று பலரும் எங்களிடம் கலைகளைக் கற்றுக் கொள்கின்றனர்.

**தங்களை இசைக்கலைஞர் என்பதன் கூடவே ஒரு தொழிலதிபராக முன்னிலைப் படுத்துவதன் காரணம்.**

நான் என்னைத் தொழிலதிபர் என்று கூறிக்கொள்வதை விட சமூக தொழில் முனைவர் என்று கூறிக் கொள்ளவே மிகவும் விரும்புகிறேன். என்னுடைய முக்கிய நோக்கம், நிறைய கலைகள் நிறைய மக்களிடம் சென்று சேர வேண்டும். திறமை மிக்க நிறைய கலைஞர்களுக்கு உதவி செய்ய வேண்டும். அவர்களும் இதனால் பயனடைய வேண்டும். வியாபார நோக்கம் சிறிதும் இல்லாமல் நம்முடைய பழம்பெரும் கலைகளை மரியாதையுடனும், நல்ல எண்ணத்துடனும் மக்களிடம் சென்று சேர்க்க வேண்டும்.

**குடும்பம்... குழந்தைகளின் படிப்பு.. இசை பயிற்சியளித்தல்... சபாக்களில் கச்சேரிகளென பரபரப்பாக சுழல்கிறீர்களே... நேரமின்மையை எப்படி சமாளிக்கிறீர்கள்?**

நேரமின்மை என்பது பெரிய பிரச்சனை தான். அது ஒரு பெரிய சவாலும் கூட. ஒவ்வொரு மாதம், வாரம். என்ன செய்ய வேண்டுமென்று திட்டமிட்டு செயல்படுவேன். சில சமயம் உறவினர்கள் வீட்டுநிகழ்ச்சிகளுக்கும்கூட போகமுடியாது. ஆனால் எவ்வளவு பரபரப்பாக இருந்தாலும் ஒரு பெரிய நன்மையென்னவெனில், என் வேலைகளை வீட்டில் இருந்தபடியே நல்ல முறையில் செய்ய முடிகிறது. இந்த காரணத்தால் என்னால் பல திறமையான ஆசிரியைகளைக்கவர முடிகிறது.அவர்களும் வீட்டில் இருந்தபடியே அவர்களுடைய குழந்தைகளைக் கண்காணித்தபடியே பணி செய்யும் வாய்ப்பு, எவ்வளவு சவால்கள் இருந்தாலும் சமாளிக்க வழி செய்கிறது. என் குடும்பத்தினரும் எனக்கு மிகவும் ஆதரவாக இருப்பதால் என்னால் சமாளிக்க முடிகிறது.

**வருங்கால திட்டங்கள் குறித்து..**

வருங்கால திட்டங்கள் நிறையவே இருக்கிறது. நான் பொறுமையான மற்றும் உறுதியான முறையில் என் கலைக்கழகப் பணிகளைச் செய்கிறேன். இப்போது

இந்துஸ்தானி சங்கீதம் என்ற வகுப்பு மற்றும் அறிமுகம் கொன்னக்கோல் என்கிற வாய் மூலம் மிருதங்க ஜதிகளை கற்றுத் தருதல் என்ற ஒரு புதிய பாடத்திட்டத்தையும் அறிமுகப்படுத்தியுள்ளேன். மொழிகள் கற்பிக்க தனிமுறை, பாடல்கள் கற்பிக்க தனிமுறை எனப் பின்பற்றுகிறோம். இப்பொழுது சிங்கப்பூரில் உள்ள எங்கள் மாணவர்கள் அனைவரும் சேர்ந்து வித்யா சுப்ரமணியன் கலைக்கழகம் தியாகராஜ ஆராதனை என்ற நிகழ்ச்சியை நடத்தினார்கள். அதே போல் நியூ ஜெர்சியிலும் நிகழ்ச்சியை நடத்தினார்கள். இந்த மாதிரி அவரவர்கள் வாழும் பகுதிகளிலும் இசைவிழா கொண்டாட நாங்கள் உதவி செய்கிறோம்.

**சமுதாயத்தில் பெண்களின் நிலை குறித்த உங்கள் பார்வை..**

சமுதாயத்தில் பெண்களின் நிலையில் ஒரு சமச்சீர் இல்லை. என்னைப் பொறுத்த வரையில் பெண்கள் தான் மற்ற பெண்களுக்கு அதிகமாக உதவி செய்ய முன்வர வேண்டும். பெண் குழந்தைகளுக்கு நிறைய விஷயங்கள் சொல்லிக் கொடுத்து வளர்ப்பது போல் ஆண்குழந்தைகளுக்கும் பெண்களை எவ்வாறு மதிக்க வேண்டும் என்று சொல்லக் கொடுத்து வளர்க்க வேண்டும். அப்பொழுது தான் சமுதாயத்தில் பெண்களின் நிலை மேன்மேலும் உயரும்.

**மகளிர் தினம் கொண்டாடும் வேளை யில்.. இன்றைய பெண்களுக்கு நீங்கள் சொல்லும் அறிவுரை...**

மகளிர் தினம் அன்று நான் சொல்ல விரும்புவது, இது நல்ல வாய்ப்புகளின் உலகம். நிறைய பெண்கள் எதிர்மறையான எண்ணங்களுடன் வாழ்கின்றனர். நம்முடைய திறமைகளையும், நேரத்தையும் நல்ல முறையில் பயன்படுத்தலாம். சிறு தொழில்கள் செய்யலாம். வீட்டில் இருந்தபடியே தனக்கு தெரிந்த கலைகளை மற்றவர்களுக்குக் கற்பித்துப் பயிற்சி அளிக்கலாம். பொதுநலசேவை செய்யலாம். மேற்படிப்பு படிக்கலாம். கடின உழைப்பு மற்றும் ஈடுபாட்டுடன் செய்தால் வெற்றி கிடைக்கும். வெற்றி கிடைக்காவிட்டாலும் விட்டுவிடக்கூடாது. விடாமுயற்சி என்பது மிகவும் முக்கியம். திரும்பத்திரும்ப முயற்சி செய்தால் கட்டாயம் வெற்றி பெறலாம். மனதில் உறுதி, கடின உழைப்பு, நேர்மைமறை எண்ணங்கள் (Determination,Hardwork,positivity) இருந்தால் எல்லா பெண்களும் சாதிக்கலாம்.

**நீங்கள் நன்றி சொல்ல விரும்பும் மனிதர்கள்.**


என் பெற்றோருக்கும், என் குருவிற்கும் முதல் நன்றி. அடுத்து என் கணவருக்கு நன்றி சொல்லப் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன். அவர் ஒரு விஞ்ஞான ஆராய்ச்சியாளர், புத்திசாலியானமனிதர். இணையதளத்தில் நான் நிகழ்ச்சிகள் நடத்தி வெற்றிபெற நிறைய வழி வகைகளை அவர் செய்து கொண்டிருக்கிறார். அடுத்து என் குழந்தைகளுக்கு நான் நன்றி சொல்லவேண்டும். நான் என் பணிகளை இடையூறு இல்லாமல் செய்ய ஒத்துழைப்பு அளிக்கிறார்கள். அடுத்து என் மாமியார், கலை கழகத்தின் அனைத்து ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் ஆகிய அனைவருக்கும் நான் நன்றி சொல்கிறேன். இறுதியாக "தமிழ் நெஞ்சம்" இதழ் ஆசிரியர் தமிழ்நெஞ்சம் அமின் அவர்களுக்கும் நான் கடந்து வந்த பாதையை பிரதிபலிக்கும் விதமாக கேள்விக் கணைகளை அமைத்த உங்களுக்கும் (கவிஞர் சாரதா க. சந்தோஷ்) என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**மனந்திறந்து பதில்களை அளித்த மைக்கு நன்றி கலைமாமணி வித்யா சுப்ரமணியன் அவர்களே..**

**சொந்த வாழ்வில் கல்வியிலும்.. இசைக் கலையிலும் சிறந்து விளங்குவதோடு மட்டுமல்லாமல்.. சமுதாயத்தில் சக பெண்களையும் ஏற்றம் பெறச்செய்து ஒரு சமூக மாற்றத்திற்கு வித்திடும் தங்களின் அரிய முயற்சிகளை வாழ்த்தி.. மென்மேலும் பல சிறப்புகளை பெற தமிழ்நெஞ்சம் இதழ் சார்பில் வாழ்த்தி மகிழ்கிறேன்..**

சந்திப்பு: சாரதா சந்தோஷ், ஐதராபாத்


பழந்தமிழ் இலக்கியத்தில்
குடும்ப அறம்
முனைவர் க. பாலதண்டாயுதம்
M.A., M.A., M.Phil., Ph.D., B.Ed.,


வைதீகம் / சங்க காலம்
ஒரு வரலாற்றுப் பார்வை
முனைவர் வி. தமிழ்மொழி
M.A., M.A., M.Phil., Ph.D.,


தென்றலின்
தேடல்கள்
கவிதைகள்
கவிஞர் தென்றல் கவி
தமிழ்ச்சிட்டு



நண்டுகளும்
சிண்டுகளும்
நெய்தல் ஜெயபால்


திருநங்கையர்
பால்நிலையும்
வாழ்நிலையும்
ஆய்வு
முனைவர்
பெண்ணியம் செல்வக்குமாரி


கவிஞர் பால தியாகராஜன்
மௌனச்
சிணுங்கல்கள்
கவிதைகள்


மெல்லொலிப்
பரல்கள்
கவிதைகள்


யார் அந்த நிலவு?
சிறுகதைகள்
மலர்மதி


குதிரையாளி
ஹைக்கூ கவிதைகள்
சுபி பிரேம்


தெவிட்டாத பாவிருந்து
பஃறொடை வெண்பா மருட்பா
நேரிசை வெண்பா
கட்டளைக் கலித்துறை
இரா.அரவிந்த் கார்த்திக்


பைந்தமிழ்ச் சோலை...!
பாமலர்


தேனீயின் தேடல்
கவிதைகள்


லப்... டப்...
கவிதைகள்
எஸ். உதய பாலா


காற்றினில் தெறித்த கனவுகள்
கவிதைகள்
பைந்தமிழ்ப் பாமணி
சரஸ்வதி பாஸ்கரன்


வலைக்குள் மலர்ந்த வனப்பு
கவிதைகள்
பாலமுனை பாறூக்


அழுக்குத் தேவதை
கவிதைகள்
ஆயுதா


விளிம்பைத் தாண்டிய விழிகள்
R.விஜயலட்சுமி


கவிதைகள்
கரைந்தழும் கடல்
பெண்ணியம் செல்வக்குமாரி

பல்சுவை
தமிழ்நெஞ்சம்
www.tamilnenjam.com
ஏப்ரல் 2019



# அரும்பழ அழகி

ஆப்பிளை எடுக்கப் போனேன்
அதனைக் கடிக்க வேண்டாம் ,
கூப்பிட்டு என்னிடம் சொன்னாள்
குறைந்தா போயிற்று கன்னம் ?

திராட்சை பழத்தைக் கண்டேன்
தீண்டியே தின்ன முயன்றேன் ,
தராமலா விடுவேன் அதுபோல்
தாமரை விழிக்குள் என்றாள் .

ஆரஞ்சு சுளையைப் பார்த்து
அதிலும் ஆசை கொள்ள ,
சாறும் நிறைந்து இருக்கும்
செவ்விதழ் பருகுக என்றாள் .

பலாச்சுளை மணத்தில் நானும்
பரவசம் கொண்டு தொடவே
நிலாமுகம் நடுவில் அமைந்த
நாசியினைப் பாரும் என்றாள் ,

மாதுளை வண்ணம் பார்த்து
மதுச்சுவை பருக எண்ண ,
மாதுஎன் தாடைப் பார்த்தால்
மாதுளைத் தோற்கும் என்றாள் .

மாம்பழ அழகைப் பார்த்து
மனதினில் கொண்டேன் ஆசை ,
தாம்பூல தட்டின் முன்னே
தளிர்முகம் காணச் சொன்னாள்.

கவிஞர். அ. முத்துசாமி,
தாரமங்கலம் .